விலை சதம் 25. தொலை பேசி: 23411

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2002, புரட்டாதி 24உ (10-10-71) ஞாயிறு 1391 ஷஃபான் 19 புத்தகம் 25 இதழ் 46

## ஈழ-தமிழக கலாசார உறவுக்கு

# உலை வைப்பு!

தமிழ் நாட்டிலிருந்து இங்கு வரும் தமிழ்ப்பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் தடைவிதிப்பதன் மூலமும் இறக்குமதியை பெருமளவு வெட்டிக் குறைப்பதன் மூலமும் ஈழ-தமிழக கலாச்சார இலக்கிய தொடர்புகளுக்கு உலை வைக்கும் முயற்சிகள் மீண்டும் திரைமறைவில் ஆரம்பமாகியுள்ளன.

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததையடுத்து இந்திய தமிழ் பத்திரிகைகளுக்கு தடைவிதிக்கப்பட வேண்டுமென்று எழுந்த கூக்குரல், தமிழ்மக்கள் காட்டிய கடுமையான எதிர்ப்பினுல் சில காலம் கைவிடப்பட்டிருந்தது தெரிந்ததே. இப்போது மீண்டும் அமைச்சர் குமாரசூரியர்—கம்யூனிஸ்டு—தினபதியார் கும்பல் தமிழக ஏடுகளைத் தடைசெய்திடும் முயற்சியில் வெகு மும்முரமாக ஈடுபட்டுள்ளதாம்.

இதற்கென நியமிக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்டுகளை உள்ளடக்கியுள்ள குமாரசூரியர் குழு, தமிழ் நாட்டுப் பத்திரிகைகளை தடை செய்ய வேண்டுமெனவும்-கண்துடைப்புக்காக சில குறிப்பிட்ட வார, மாத, சஞ்சிகைகளை மட்டும் தற்காலிகமாக அற்ப சொற்பம் இறக்குமதி செய்து தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தணித்துவிட்டு — நாளாவட்டத்தில், அதையும் முற்றுக நிறுத்திவிட வேண்டு

(11-ம் பக்கம் பார்க்க)

### சமஷ்டி சகாப்தம்!

''மாநில சுயாட்சிக் கோரிக்கையை கைவிட்டு தமிழகத்திற்கு பூரண சுதந்திரம் கேட்பதற்கு நமக்கு உரிமையுண்டு. ஆயினும் நாம் வாழ்வது சங்ககாலம் அல்ல; சமஷ்டி சகாப்தம்! 300 ஆண்டுகளுக்கு முன்பு இன்று நாம் காணும் அமெரிக்க சமஷ்டியோ, சோவியத் சமஷ்டியோ மலேசிய சமஷ்டியோ இருக்கவில்லை; உலகம் சமஷ்டி மயமாகி வருகிறது. நாம் மட்டும் மேற்போக்கில் செல்ல முடியாது.''

—சிலம்புச்செல்வர் ம. பொ.சி. (கோவையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக்கழக மாநாட்டில் பேசியது.)

# தமிழர் தனியரசு அமைத்து விடுவராம்!

தமிழர்கள் பிரிவினைவாதிகள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையாட்கள்; தேசத்துரோகிகள்; என்று சிங்கள மக்களிடையே இனத் துவேஷத்தை தூவுவது போல அண்மையில் பேசியிருக்கிருர் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் லெஸ்லி குணவர்தன. பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் பேசும் பேச்சா இது என அரசியல் வட்டாரங்கள் மூக்கில் விரல்வைத்து வியப்படைகின்றன.

அமைச்சரது குறிப்பிட்ட பேச்சு 29-9-71 டைம்ஸ் ஒப் சிலோன் ஏட்டில் முதலாம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. அது வருமாறு:—

The government could have drawn up the new constitution and passed it within two months without prolonging the sittings of the Constituent Assembly, but there were other reasons to consider, especially the question of the Tamils in the North.

Their co-operation and participation in the drawing up of the new constitution was considered vital, as the Government did not have within its ranks a single member from the northern constituencies.

(11ம் பக்கம் பார்க்க)

### சொல்லும் செயலும்!

தமிழ்மொழிக்கு சகல அந்தஸ்துகளையும் வழங்குவோம். தமிழுக்கு ஆபத்து என்று யாராவது கூறினுல் அதனை நம்பாதீர்!

—திருகோணமலையில் கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத். (வீரகேசரி 4.10.71)

நூற்றுக்கு நூறு தமிழ் பிரதேசமான மட்டக்களப்பில் கல்வித்திணைக்களம் 5. 8. 71ல் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி அழைப்பிதழில் ஆங்கிலமும், சிங்களமுமே இடம்பெற்றிருந்தது. தமிழ் முற்றுகப் புறக்கணிக்கப்பட்டது!

—5.9.71 சுதந்திரன் செய்தி

# 'சுகாதார அமைச்சருக்கு மாலைசூட்டவுமில்லை; மேளம்கொட்டி வரவேற்கவும் இல்லை'

## விஷமப் பிரசாரத்துக்கு செல்வா ஆப்பு!

''அரசகரும விஷயமாக எனது தொகுதிக்கு வந்திருந்த சுகாதார அமைச்சரை நான் வரவேற்றேன் என்றுல் அதற்குக் காரணம், மனமாற்றமும் அல்ல; தடுமாற்றமும் அல்ல; கொள்கை மாற்றமும் அல்ல; கட்சித் தீர்மானத்தை மீறி நான் எவ்விடத்திலும் நடந்துகொண்டதில்லை.''

—இவ்வாறு தமிழரசுத் தந்தை செல்வா அவர்கள் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார். தினபதியின் விஷமத்தனங்களுக்கு பதிலளித்து தந்தை செல்வா மேலும் கூறியதாவது:-



''தமிழ்ப்பகுதிக்கு செல்லும் அமைச்சர்களின் திக்குவிஜயங்களை பகிஷ்கரிப்பதென்பது தமிழரசுக்கட்சியின் தீர்மானம். ஆனுல் அரசகரும விஷயங்களுக்காக — தொகுதி மக்களின் தேவைகளை கவனிப்பதற்காக — அமைச்சர்கள் வந்தால், அந்தந்தத் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்துகொள்ளலாம் என்றும் கட்சி விதிவிலக்களித்திருக்கிறது. இந்த தீர்மானத்தின்படியே நடந்துகொண்டேன்:

(11-ம் பக்கம் பார்க்க)

### பளீர்! பளீர்!! பளீர்!!!

கட்சிவிட்டுக் கட்சி பாய்வதில் வல்லவரும் அண்மையில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்ந்தவரும் 'மட்டக்களப்பு முட்டாள்' என அழைக்கப்படுபவருமான 'இராஜாதி இராஜர்' ஒருவர் அளவுக்கு மிஞ்சிய குடிபோதையில் மட்டக்களப்பு வாடி வீட்டில் வைத்து கன்னமிரண்டும் வீங்கும் அளவுக்கு 'பளீர் பளீர்' என அதேகட்சியைச் சேர்ந்த மற்றுேர் முஸ்லிம் பிரமுகரிடம் வாங்கிக்கட்டினுராம்;

'வட் பிளடி கவண்மெண்ட்' என்று முணுமுணுத்துக்கொண்டு குடிவெறியிலிருந்த முட்டாள், வாயில் வந்தபடி வார்த்தைகளை உதிர்த்துக்கொண்டே குறித்த இஸ்லாமியப் பிரமுகர் மீது பாய, இஸ்லாமியப்பிரமுகர் இவரைப்போதும் போதுமென்ற அளவுக்கு வசமாக அடித்து உதைத்துவிட்டாராம்!

### சோசலிசமாம் சோசலிசம்..!

கலைச்சொல் ஆக்கக்குழுவுக்கு தமிழ் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவது அக்குழுவின் ஆரம்பகாலம்தொட்டு இருந்து வந்த நடைமுறையாகும். சொல்லாக்கம் தமிழ் மரபு கெடாமல் நடைபெறுவதை கண்காணிக்கவே தமிழ்ப்பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுவந்தனர். பேராசிரியர் கணபதிப்பிள்ளையும், செல்வநாயகமும் இக்குழுவில் முன்பு பணியாற்றியிருக்கின்றனர்.

ஆனுல் சோசலிசம் பேசும் இன்றைய ஆட்சியில் கலைச்சொல் ஆக்கக் குழுவுக்கு தமிழ்ப்பேராசிரியர் யாருமே இதுவரை நியமிக்கப்படவில்லை! சோசலிசம் பேசுவோர் தமிழை வளர்க்கும் இலட்சணத்தை பார்த்தீர்களா?

# கல்வியமைச்சருக்கு திருமலையில் காத்திருந்தது ஏமாற்றம்!

திருகோணமலை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையாக இருக்கும் என்று எதிர்பார்த்து சென்ற வாரம் தமிழ்த் தினவிழாவில் கலந்துகொள்ள அங்கு சென்ற கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அது தமிழரசுக் கட்சியின் எஃகுக் கோட்டையாக இருப்பது கண்டு உள்ளம் உடைந்து கொழும்பு திரும்பினுர். ஐக்கிய முன்னணியின் நீல, சிவப்பு கொடிகள் தம்மை எதிர்கொண்டழைக்கும் என்று கனவு கண்டு கொண்டிருந்த கல்வியமைச்சர் அங்கு கெம்பீரமாக ஓங்கிப் பறந்த தமிழரசு மூவண்ணக் கொடி கண்டு மிரண்டார்: கலங்கினுர். குனிந்த தலையுடன் தலைநகர் மீண்டார்.

தமிழ்த்தின விழாவில் பேசியபோது பிள்ளைகளின் தாய்மொழியே போதனு மொழியாக இருக்கவேண்டுமென அழுத்திச் சொன்னுர். அதுமட்டுமன்றி இவ்விழாவையொட்டி அமைச்சர் வீரகேசரிக்கு கொடுத்த செய்தியொன்றிலும் தாய்மொழியே பயிற்சிமொழியாக இருக்கவேண்டுமென்பதை வலியிறுத்தியுள்ளார்.

இப்படியெல்லாம் தாய்மொழிக் கல்வி பற்றி இப்போது வலியுறுத்தும் அமைச்சரும், அவரது அரசும்,

(11-ம் பக்கம் பார்க்க)

# ஒற்றை ஆட்சி நாட்டை துண்டாடும்!

''பல இன மக்கள் வாழும் ஒரு நாடு கூட்டாட்சி (சமஷ்டி) அமைப்பின் கீழ்தான் பிளவுபடாமல் ஒற்றுமையாக இயங்க முடியும். ஒற்றையாட்சி அரசியலமைப்பை திணிக்க முற்பட்டால் நாடு துண்டாடக் கூடிய ஆபத்துத்தான் ஏற்படும்.''

—இந்தியத் தலைமை நீதிமன்ற முன்னுள் நீதிபதி கே. சுப்பாராவ் சென்னையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வாறு கூறியருகிருர்.

# தமிழ் தின விழாவில் தங்கத்துரை பேசியதென்ன?

திருகோணமலையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில்பேசிய மூதூர் 2வது பா. உ. திரு. தங்கத்துரை தமிழர்கள் சிங்களம் படிக்கவேண்டும் என்று கூறியதாக பொய்ப்பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன இந்நாட்டுத் தினசரிகள். நமது மூதூர் நிருபர் அனுப்பியுள்ள செய்

(11-ம் பக்கம் பார்க்க)

# வங்கி பயிற்சி வகுப்புக்கள் தமிழில்!

வங்கியாளர் பயிற்சி வகுப்புக்களை தமிழிலும் நடத்துவதற்கு தமிழரசுத்தந்தையும் மத்தியவங்கி தமிழ் ஊழியர் சங்கமும் எடுத்த விடாமுயற்சிக்குவெற்றி கிடைத்துள்ளது. நிதியமைச்சரின் உத்தரவுக் கிணங்க வங்கியாளர் பயிற்சி நிறுவனம் இவ்வகுப்புக்களை தமிழிலும் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழரசுத் தந்தையும், வங்கித் தமிழ் ஊழியர் சங்கமும் முன்னர் எடுத்த முயற்சியினுல், வங்கியாளர்

(11-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழர்கள் புத்திசாலிகள்

இனிக்க இனிக்கப் பேசிக் கழுத்தறுப்பதில் நமது அமைச்சர்கள் அசகாய சூரர்கள். அதுவும் தமிழ் பகுதிக்கு விஜயம் செய்யும் போதும் தமிழ் மக்கள் மத்தியிலே உரையாற்றிடும் போதும் அவர்களது வாயிலிருந்து தித்திக்கும் தேன் சொட்டும்! தீஞ்சுவை அமுதூறும்!

இது இன்று நேற்றல்ல—இந்தநாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆட்சியிலுள்ளோர் பின்பற்றி வந்திருக்கும் நரித் தந்திரம்!

ஆனால் அமைச்சர்கள் வாயிலிருந்து வரும் இந்தத் தித்திப்புப் பேச்சுக் கேட்டுத் தமிழ் மக்கள் ஒருபோதும் மதி மயங்கியதில்லை; வழி தவறிப் போனதில்லை; ஏனெனில் அமைச்சர்களது பேச்சினுள்ளே தடவப்பட்டுள்ள கொடிய நஞ்சினைத் தமிழ் மக்கள் அறிவார்கள்; அமைச்சர்களின் பேச்சினை அவர்கள் என்றுமே 'சீரியஸாக' எடுத்துக் காதில் போட்டுக் கொண்டது கிடையாது!

இன்று இந்நாட்டில் தமிழ்மொழி எவ்வளவு தூரம் அரசுத்துறைகளில் ஒழிக்கப்பட்டு வருகிறதென்பதையும்—

தமிழ்மொழி விசேட சட்டம் நடைமுறைப்படுத்தப் படாது எப்படி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும்—

தமிழில் அரசுக்குக் கடிதம் எழுதித் தமிழில் பதில் பெறும் உரிமையைக் கூடத் தமிழனுக்கு அளித்திட அரசு நடவடிக்கையெடுக்கவில்லையென்பதையும்—

உத்தியோகத்துறையில், உயர் கல்வி வாய்ப்புக்கள் வழங்குவதில், அரசாங்க நியமனங்களில் எவ்வளவு தூரம் தமிழ் பேசும் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டு வருகிறதென்பதையும்—

தமிழ் பேசும் மக்களின் தொண்டைக்குள் எவ்வளவு தூரம் சிங்கள மொழியை ஆட்சி மொழியாகவும் நீதி மொழியாகவும் வலிந்து திணிக்க முயற்சிகள் நடைபெற்று வருகிறதென்பதையும்—

இதுபோன்று தமிழினத்துக்கு இழைக்கப்பட்டு வரும் பன்னூறு அநீதிகளையும் தமிழரசுக்கட்சியினர் நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அமைச்சர்களிடம் தனிப்பட்ட முறையிலும், மகஜர்கள் மூலமாகவும் போதும் போதும் என்று கூறுமளவுக்கு இதுவரை எடுத்துக் காட்டிவிட்டார்கள்!

புதிய அரசியலமைப்பு அடிப்படைத் தீர்மானங்கள் அ. நி. சபையில் விவாதிக்கப்பட்டபோது புதிய அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கு ஆட்சிமொழியந்தஸ்து, போதனு மொழியந்தஸ்து, நீதிமன்ற மொழியந்தஸ்துப் போன்ற உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்று தமிழரசுக்கட்சி கொண்டுவந்திருந்த திருத்தங்களும், அனைத்துத் தமிழ்க் கட்சிகளின் சார்பில் கொண்டு வரப்பட்ட ஒன்பது அம்சத் திருத்தங்களும் அரசாங்கத்தினுல் அப்படியே நிராகரிக்கப் பட்டு விட்டன.

இப்படியெல்லாம் செய்துவிட்டு—தமிழ் மக்களின் உள்ளங்களிலே வேலைப் பாய்ச்சிவிட்டு—அவசரகாலச் சட்டத்தின் துணையுடன் தமிழ் பிரதேசங்களுக்கு அடிக்கடி சென்று அமைச்சர்கள் இனிக்க இனிக்கப் பேசிவிட்டுத் திரும்புகிருர்கள்.

இதோ—சென்ற ஒரு கிழமைக்குள் மூன்று அமைச்சர்கள் தமிழ் மக்களுக்கு வழங்கிய மூதுரைகள்;

"தமிழர்களை ஐக்கிய முன்னணி அரசு புறக்கணிக்கிறது என்பது அர்த்தமற்ற பேச்சு.

—தெல்லிப்பளையில் சுகாதார அமைச்சர்.

"தமிழ் மொழிக்கு உரிய சகல அந்தஸ்துகளையும் வழங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

—திருமலையில் கல்வியமைச்சர்.

தமிழ் மக்கள் அரசியலில் என்ன நடைபெறுகிறதென்றே தெரியாத நிர்மூடர்கள் என்ற நினைப்பில் மேற்கண்டவாறு இரு அமைச்சர்கள் பேச, விளையாட்டுத்துறை அமைச்சரோ "பக்தா இது என்ன பூலோகமா' என்று கேட்டிடுவதுபோல வார மஞ்சரி ஒன்றுக்குப் பேட்டியளித்திருக்கிருர்!

'தமது குறைகளையும் தொகுதித் தேவைகளையும் தமிழரசு எம். பீ.க்கள் எம்மிடம் வந்து சொல்லுகிருர்கள் இல்லை; சொன்னுல் அவற்றை நிறைவேற்றக் காத்திருக்கிறேம்!' என்று புரளியளந்திருக்கிருர் விளையாட்டுத்துறை அமைச்சர்.

ஐயா, அமைச்சரே, தமிழரசுக்கட்சி பா. உ.க்கள் குறைகளைச் சொல்லவில்லையே என்று குறைப்படுவதற்கு முன், அவர்கள் இதுவரை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அமைச்சர்களிடமும் எடுத்துக் கூறிய குறைகளை — குமுறல்களை — தேவைகளை நிறைவேற்றி விட்டதா உமது அரசாங்கம் என்று கேட்க விரும்புகிறேம்! வேண்டுமானுல் பட்டியல் தரத் தயாராக இருக்கிறேம்!

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான தமிழரசு பா. உ.க்களை மதிக்காது அவர்களைப் புறக்கணித்து—அவர்களது தொகுதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட, மக்களால் நிராகரிக்கப்பட்டுக் கட்டுக்காசிழந்த ஆளுங் கட்சி ஆதரவு வேட்பாளர்களின் யோசனைகளையும் சிபார்சுகளையும் கேட்டு நடக்கின்றனர் சில அமைச்சர்கள். சனநாயக மரபுக்கே குழிபறிக்கும் அவர்களையல்லவா விளையாட்டு அமைச்சர் முதலில் கண்டித்துத் திருத்த வேண்டும்?

ஆகவே தமிழ் பகுதிக்குச் சென்று தமிழர்களை ஏமாற்றி விடலாமெனக் கருதும் அமைச்சர்கள் ஒன்றைமட்டும் உணர வேண்டும். தமிழர்கள் அரசியலில் புத்திசாலிகள் என்பது தான் அது!

இனிப்பு என்று நாவில் எழுதிவிட்டால் அது ஒரு போதுமே இனித்திடாதென்பதைத் தமிழர்கள் நன்றாக உணர்வார்கள்!

# கூட்டணியினரின் சூழ்ச்சிகளைத் தமிழரசுத் தந்தை முறியடித்தார்!

## தெல்லிப்பளை மருத்துவமனை திறப்பு விழாவின் பின்னணியில் நடந்த சம்பவங்கள்!

1970ம் ஆண்டுக்கு மூன்ரை ரூபா 60 இலட்சம் செலவில் தெல்லிப்பளை மருத்துவமனை அமைத்து முடிக்கப்பட்டது. தேசிய அரசாங்கமே இதற்கு நிதி ஒதுக்கிக் கட்டியது. ஐக்கிய முன்னணி அரசு மருத்துவ மனையைத் திறந்துவைப்பதில் தாமதங் காட்டியது. இதனையுணர்ந்த காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் சுகாதார அமைச்சர் ஆரியதாசாவிடம் வற்புறுத்தி அமைச்சரையே திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்'

வட பகுதிக்கு வந்துவிட வேண்டுமென்ற ஆவலுடனிருந்த அமைச்சர், அதுவும் தந்தை செல்வா அழைத்தவுடன் சம்மதம் தெரிவித்துவிட்டார். திகதியும் குறித்துவிட்டார். [30-9-71]

இதனையறிந்த வட பகுதிக் கூட்டணியினர் பல திட்டங்களைத் தீட்டினர். அதிலொன்று தெல்லிப்பளை ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் தாங்களும் அமைச்சரை அழைத்த பெருமையைத் தட்டிக்கொள்ளலாம் என்பது.

ஆனுல் தெல்லிப்பளை ஊ. ம. தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் அமைச்சரை அழைத்தாரோ இல்லையோ ஊராட்சி மன்றத்திற்கு அமைச்சிலிருந்து எது விதபதிலும் வந்ததாகத் தெரியவில்லை; இருப்பினும் அமைச்சரைக்கொண்டு எம். சிதம்பரநாதனும் அழைத்தார் என்று கூறவைத்துள்ளனர் கூட்டணியினர்.

### ஒப்பமிட மறுத்தார்!

மருத்துவமனைத் திறப்பு விழா ஒழுங்குகள் சம்பந்தமாக யாழ்ப்பாண சுகாதார மா அதிபர் (S. H. S.) அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. திறப்பு விழாவுக்கும், வரவேற்புக்கும் தந்தை செல்வாவைத் தலைமை வகிக்க வைப்பதில் கூட்டணியினரும் தீவிரங் காட்டினர். வற்புறுத்தலின் பேரில் ஒருவாறு தலைமை வகிக்கச் சம்மதம் தெரிவித்தார் தந்தை. செயலாளராகத் தெல்லிப்பளை ஊராட்சிமன்றத் தலைவர் சிதம்பரநாதன் தெரிவு செய்யப்பட்டார்.

கூட்டம் நடைபெற்ற மறுநாள் அமைச்சரை காங்கேசன்துறை விருந்தினர் விடுதியில் மதிய விருந்தளிக்க அழைப்பதென்றும் அவ்விருந்தில் கலந்துகொள்ளும்படி தந்தை செல்வா வரவேற்புக் குழு சார்பில் கேட்பதாக ஒரு கடிதம் அனுப்புவதற்கு தந்தையிடம் கையொப்பம் பெறக் கூட்டணியினர் முயன்ற பொழுது தந்தை மறுத்து நான் விருந்து கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்.

பின்னர் திடீரென்று கூட்டணியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் பொன்னம்பலமும் சிறீலங்கா ஆசிரியர் முருகையாவும் கொழும்புக்குச் சென்று அமைச்சர் பீட்டர் கெனமனையும், அமைச்சர் குமாரசூரியரையும் மருத்துவமனைத் திறப்பு விழாவிற் சிறப்பு விருந்தினராக அழைத்துள்ளதாக அறிந்தோம். பின் இச் செய்தி 29-9-71ம் நாள் ஈழநாடு ஏட்டில் தலைப்புச் செய்தியில் வந்ததையும் பார்த்தோம். அதே செய்தியில் வரவேற்புக் குழுத் தலைவர் எம். சிதம்பரநாதனென்றும் கூட்டுச் செயலாளர்கள் வி. பொன்னம்பலம், பி. முருகையா என்றுமிருந்தது. இச் செய்தி தந்தையவர்களுக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது.

### கறுப்புக் கொடி கட்டுவேன்!

கூட்டணியினர் திட்டங்களை உணர்ந்த தந்தை செல்வா யாழ்ப்பாணம் சுகாதார மா அதிபரிடம் சென்ருர்: 'தெல்லிப்பளை மருத்துவ மனைத் திறப்பு விழா உத்தியோகபூர்வமானது. நான் அமைச்சர் ஆரியதாசாவை மட்டும் மருத்துவமனையைத் திறந்து வைக்கும்படி அழைத்தேன். மற்ற அமைச்சர்களை அழைக்கவில்லை. இது ஐக்கிய முன்னணிக் கூட்டமல்ல. ஏனைய அமைச்சர்கள் வந்தால் நான் திறப்பு விழாவுக்கு வரமாட்டேன், பங்கு பற்ற மாட்டேன். மருத்துவ மனை எல்லைக்குள் ஐக்கிய முன்னணி அரசியல் கட்சிச் சின்னங்கள் அலங்கரிக்கப்பட்டால் நான் கறுப்புக்கொடி கட்டுவேன்.'' இதனை அமைச்சருக்கு அறிவித்து விடுங்கள்;

— இவ்வாறு தெரிவித்து விட்டுச்சென்ருர்.

(11-ம் பக்கம் பார்க்க)

# டாப்பர் மாமா தினபதியாரின் டுப்பு!

அண்மையில் சுகாதார அமைச்சர் ஆரியதாசா வட பகுதிக்கு உத்தியோகபூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு தெல்லிப்பளையில் பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் கட்டப்பட்ட அரசினர் வைத்தியசாலையொன்றை திறந்து வைத்தார். இந்த வைபவத்தில் காங்கேசன்துறைத் தொகுதி பா. உ. என்ற முறையில் தமிழரசுத்தந்தையும் கலந்துகொண்டார்.

இதை வைத்துக்கொண்டு தமிழரசுத்தந்தையும், தமிழரசுக் கட்சியும் ஏதோ கொள்கையை காற்றில் பறக்கவிட்டுவிட்டது போல பொய்யும் புரட்டும் எழுதி வருகிருர் பத்திரிகைத்துறை விபச்சாரியான தினபதியார்!

தமிழரசுத்தந்தை, அமைச்சருக்கு நிலபாவாடை விரிக்கவுமில்லை; மேளதாளம் கொட்டி வரவேற்பு கொடுக்கவுமில்லை; பூரண கும்பம் வைக்கவுமில்லை— ஒரு சாதாரண மாலைகூட அமைச்சருக்கு போடவில்லை.

தமது தொகுதிக்கு, தொகுதி மக்களின் ஒரு தேவையை நிறைவேற்ற வந்த அமைச்சரை, தமிழரசுத் தந்தை தொகுதி பா. உ. என்ற முறையில் கைகுலுக்கி மட்டுமே வரவேற்ருர்.

''திரு. செல்வநாயகம் அமைச்சருக்கு மாலை சூட்டாமல் கைகுலுக்கியதுடன் நிறுத்திக்கொண்டார். கூட்டணி கட்சிகளைச் சேர்ந்தவர்களின் 'வரவேற்பு அமளியில்' கலந்துகொள்ளாமல், திரு. செல்வநாயகம் ஒதுங்கிக்கொண்டார்'' என்பதாக 2.10.71 வீரகேசரி (பக்கம் 2) கூறுகிறது. ஆனுல் தினபதியாரோ. அமைச்சருக்கு செல்வா மாலை சூட்டி, ஏதோசோடசோபசார, வரவேற்புக் கொடுத்ததாக மக்கள் மயங்கக்கூடிய முறையில் பொய்க்குமேல் பொய் எழுதியிருக்கிருர்!

வைத்தியசாலை திறப்புவிழாவில் மக்கள் செல்வாவுக்கு மாலை சூடி வாழ்த்தினர் தவிர செல்வா அமைச்சருக்கு ஒரு மாலைதானும் போடவுமில்லை—

அமைச்சர்தான் செல்வாவைத் தேடித் தேடிப் போய் உரையாடினுரே தவிர, செல்வா அமைச்சரை நாடி நாடி உரையாடவுமில்லையென்பதை 2.10.71 வீரகேசரி கூறுகிறது.

தமிழரசுக்கட்சியின் கொள்கையென்ன? எந்தச் சமயத்தில் எப்படி நடந்து கொள்வது என்பதையெல்லாம் முடிவு செய்யவேண்டியவர்கள் தமிழரசுக்கட்சியினரே தவிர தமிழ்த் துரோகி தினபதியார் அல்ல: சரியோ தவறே, பொய்யோ உண்மையோ தமிழரசுக்கட்சியை சம்பந்தப்படுத்தி செய்தி வெளியிட்டுத்தான் சரிந்துகொண்டுபோகும் தமது விற்பனையைத் தூக்கி நிறுத்திவிட முடியும் என்பது தினபதியாருக்கு தெரியும். அதனுல் பைத்தியகாரத்தனமாக நினைத்ததையெல்லாம் எழுதிவருகிருர்;

இதோ, தினபதியாரின் பொய்யை முறியடிக்கும் 2.10.71 வீரகேசரி செய்தி: இதையும் படித்துவிட்டு தினபதியார் மீது காறித் துப்புங்கள்!

''அதன்பின் (திறப்புவிழாவின்பின்) நடந்த கூட்டத்தில் அவர்கள் (திரு. செல்வநாயகம், வி. தர்மலிங்கம்) கலந்துகொள்ளவில்லை. தாங்கள் ஏன் கலந்துகொள்ளவில்லையென்பதை விளக்கி திரு. தர்மலிங்கம் அறிக்கையொன்று விடுத்தார்.

"திறப்பு விழா வைபவம் உத்தியோகபூர்வமானதாக இருக்குமென்று எதிர்பார்த்தோம். ஆனுல் அது ஐக்கிய முன்னணி சார்பு பிரசாரக் கூட்டமாக மாறிவிட்டது. எனவே இதில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை.''

—என்று அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.''

## அவரும் உணர்கிருர்!

'சுகாதார இலாகா வகுப்புவாத அடிப்படையில் இயங்குகிறது. தெல்லிப்பழை ஆஸ்பத்திரி மிகவும் பெரிய போராட்டத்தின் பின்னர் திறக்கப்பட்டது. அது ஒரு சாதனையே தான்.

எனக்குக் கல்வி 'இலாகா தான் சலுகை செய்கிறது. நான் அதிபராக இருந்தபடியால் இச்சலுகை கிடைக்கிறது. எனக்குப் பிடிக்காத பகுதி சுகாதாரப்பகுதி.'

—சங்கானைப் பட்டினசபை நூல்நிலையத்தில் 2-10-71ல் நடைபெற்ற கருத்தரங்கில் வட்டுக்கோட்டை பா. உ. தியாகராசாவின் பேச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைத் தடையை எதிர்த்து

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

சோசலிசத்தின் பெயரால் மற்ருேர் பெரிய அடியை ஈழத்தமிழினத்துக்கு கொடுப்பதென்று அரசு முடிவு செய்திருக்கிறது—ஆமாம் நண்பா, தமிழ் நாட்டு ஏடுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினையும் கண் துடைப்புக்காக இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள ஏடுகளின் தொகை பெருமளவு வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளதனையுமே இங்கு குறிப்பிடுகிறேன்.

தமிழினம் காட்டிய கடுமையான எதிர்ப்பினுல் சிறிது காலம் கைவிடப்பட்டிருந்த—தமிழக ஏடுகளுக்கு தடை விதித்திடும் திட்டத்தினை இப்போதுள்ள அவசரகால நிலையினைப் பயன்படுத்தி வெற்றிகரமாக நிறை வேற்றிடுவது என்று 'திடீர்' அமைச்சர் முடிவு செய்து விட்டாராம்! ஆம் நண்பா, புலி தூங்கிக்கொண்டிருக்கிறது என்கின்ற நினைப்பில் இடறிப்பார்க்கிருர்கள்!

சோசலிச பாதையில் நடைபோடுகிறேும் என்று கூறுவோர் ஆட்சிபுரிந்திடும் இந்நாட்டுக்கு, முதலாளித்துவ அமெரிக்காலிருந்து இங்கிலாந்திலிருந்து, எல்லாம் ஆங்கில சஞ்சிகைகள் வந்து குவியலாம்; ரஷியாவிலிருந்து, மற்றும் கம்யூனிச நாடுகளிலிருந்து எல்லாம் பொதுவுடமை பரப்பிடும் பிரசுரங்கள் வரலாம்: ஏன் இந்தியாவிலிருந்து கூட ஆங்கில ஏடுகள் இறக்குமதியாகலாம்; ஆனுல் தமிழ் நாட்டிலிருந்து மட்டும் தமிழ் ஏடுகள், சஞ்சிகைகள் இங்கு வரக்கூடாது; இதற்குப் பெயர் தான் சோசலிசம், இந்நாட்டில்!

தமிழக ஏடுகளைத்தடை செய்திடுவதற்கு அரசும், அதற்கு ஆலவட்டம் வீசிடும் 'சிவப்பு' எழுத்தாளர்களும் கூறிடும் காரணம் வேடிக்கை நிறைந்தது; தமிழினத்தாரை மடையர்களாக்குவது; உள்ளூர் தமிழ் இலக்கிய சஞ்சிகைகளையும், ஏடுகளையும் கைதூக்கி விடுவதற்கே தமிழக ஏடுகளுக்கு தடைவிதிக்கப்படுகிறது என்பது அவர்களது வாதம்!

உள்ளூரில் தமிழ்மொழியையும் நாட்டின் ஆட்சிமொழியாக ஏற்றுக்கொள்ள மறுத்து—புதிய அரசியல் சட்டத்திலும், தமிழுக்கு கௌரவமான அந்தஸ்து வழங்க முடியாதென்று கைவிரித்து — நாளிலும் பொழுதிலும் அரசுத்துறைகளிலிருந்து தமிழை ஒழித்துக்கட்டிவரும் அரசுதான், ஈழத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ் ஏடுகளின் முன்னேற்றத்துக்கும் உதவப்போகிறதாம்—தமிழர்கள் இதையும் நம்பவேண்டுமாம்! ஏமாந்த சோணகிரிகளா தமிழ் மக்கள்?

தமிழில் கடிதம் எழுதும் தமிழனுக்கு தமிழில் பதில் தராமல் தனிச்சிங்களத்தில் பதில்தரும் அரசுதான் தமிழை வளர்க்க உதவி செய்யப்போகிறதாம்; இதையும் நாம் நம்ப வேண்டுமாம்!!

நண்பா, ஈழத்தில் தமிழ் இலக்கிய சஞ்சிகைகளை வளர்க்க வேண்டும் என்று உள்ளபடியே அரசுக்கு எண்ணமிருந்திடின், அவற்றின் வளர்ச்சிக்கு எத்தனையோ முறைகளில் உதவிட முன் வந்திருக்கலாமே!

இந்நாட்டில் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெற்றிபெற முடியாமல் போகின்றன என்ருல் அதற்கு ஒரு முக்கியமான காரணம் நிதிபற்ருக்குறைதான். எனவே இங்கு தமிழ் இலக்கியஏடுகளின் வளர்ச்சிக்கு உதவிடவேண்டுமென்ற அந்தரங்க சுத்தியான எண்ணம் அரசுக்கு இருந்திடின், ஏடுதொடங்குவோர்க்கு கடனுதவி தந்திடலாம்; அரசாங்க விளம்பரங்கள் கொடுத்து உதவிடலாம்; அச்சடிக்கும் தாள் மலிவு விலைக்கு கொடுத்திடலாம்; வானெலியில் அவைபற்றி இலவச பிரசாரம் செய்திடலாம்; இப்படி எத்தனை வகைகளில் உதவி செய்திட முடியும்?

இவைகளை செய்யாது தமிழக ஏடுகள் தாம் இங்கு இலக்கிய ஏடுகளின் வளர்ச்சியை தடை செய்கின்றன என்ற போலிச் சாட்டுடன் அந்த ஏடுகளின் இறக்குமதியை தடை செய்திடுவது நிச்சயம் நஞ்சு கலந்த திட்டமாகும்!

ஆம் நண்பா, ஒரே கல்லில் இரண்டு மாங்காயை அடித்திடலாம் என்று நினைக்கிறது அரசு; தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக உதவிடுவது போல மாயாஜாலம் காட்டிடும் அதே வேளையில் இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுத் தமிழர்களுக்குமிடையே வரலாற்றுக் கெட்டாத காலம் முதல் இருந்து வரும் இன, மொழி, கலாசார ஒருமைப்பாட்டினைத் தகர்த்தெறிவது தான், தமிழக ஏடுகள் இறக்குமதித் தடைக்கு பின்னேயிருக்கும் சதித் திட்டமாகும்.

இந்த அரசு பதவிக்கு வந்தபின், இலங்கைத் தமிழ் வேறு; இந்தியத் தமிழ் வேறு; இந்தியத் தமிழ் இலக்கியம் வேறு; இலங்கைத் தமிழ் இலக்கியம் வேறு; என்கிற நச்சுப் பிரச்சாரம் — தமிழினத்தின் ஒருமைப்பாட்டினையே கூறுபோட்டிடும் பிரசாரம் — முடுக்கிவிடப்பட்டு வந்ததனை கவனித்திருப்பாய்! ஆளும் கட்சியின் கட்டளைப்படி சில சிவப்புத் தமிழர்கள் இந்தப் பிரசாரத்தினை திட்டமிட்டு நடத்தி வந்திருக்கின்றனர்; இப்போதும் நடத்துகிருர்கள்!!

ஆம் நண்பா, திரிபுவாத கம்யூனிஸ்ட் ஏடு, தமிழக ஏடுகளின் இறக்குமதி தடைபற்றிக் குறிப்பிடும்போது, தமிழ் நாட்டு ஏடுகளை அந்நிய ஏடுகள் என்று குறிப்பிட்டிருக்கிறது. கம்யூனிஸ்டுகளுக்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் ரஷியர்கள் நெருங்கியவர்கள்; ஆனுல் அருகேயிருக்கும் தமிழ் நாட்டார் மட்டும் அந்நியர்கள்; இது அனைவரும் அறிந்ததுதானே!

கம்யூனிஸ்டுகளுக்கு தமிழ் நாட்டார் அந்நியர்களாக இருக்கலாம்; ஆனுல் இந்நாட்டுத் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டாருக்குமிடையேயுள்ள பிணைப்பு யாராலும் அழிக்க முடியாதது; வரலாற்றுக்கெட்டாத காலம் முதலிருந்து வரும் அன்புப் பிணைப்பு அது; தமிழுணர்ச்சி ஏற்படுத்தி வைத்துள்ள பாசம் அது; பேரறிஞர் அண்ணு வளர்த்துவிட்ட உறவு அது! இந்த பாசத் தொடர்பை — கலாசார ஒருமைப்பாட்டை — மொழி, இன, ஒற்றுமையை— தகர்த்தெறிந்திடும் முதல் முயற்சியே தமிழக ஏடுகள் இறக்குமதிக்கு விதிக்கப்படும் தடை என்பதே நமது கருத்தாகும்!

## அரசை நோக்கி குவியட்டும் கண்டன தந்திகள்!

இலங்கைத்தமிழ்; இந்தியத்தமிழ்; இலங்கை தமிழிலக்கியம்; இந்தியத் தமிழிலக்கியம்; என தமிழையும், தமிழிலக்கியங்களையும் துண்டாட, பிளவுபடுத்த தன்மானத் தமிழினம் ஒருபோதுமே அனுமதிக்காது! இலங்கைத்தமிழிலக்கியம்; இந்தியத்தமிழிலக்கியம்; என்று துண்டாடத் தொடங்கினேமானுல், நமக்கு—இலங்கைவாழ் தமிழினத்துக்கு—எந்த தமிழிலக்கியமும் சொந்தமாக முடியாது. திருக்குறள், சங்க இலக்கியங்கள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கம்பராமாயணம், மகாபாரதம், —ஏன்—தமிழிலுள்ள— நாம் இன்று உரிமை கொண்டாடும் அத்தனை இலக்கியங்களுக்கும் தாயகம் தமிழ்நாடுதான்!

இலங்கைத் தமிழ், இந்தியத் தமிழ் என்று தமிழைக் கூறுபோட்டிடுவதன்மூலம்-ஈழத் தமிழினம் அதல பாதாளத்தில் தள்ளி வீழ்த்தப்படும் என்பதை சிங்கள அரசு நன்குணரும். அதனுல்தான், இலங்கைத் தமிழ், இந்தியத் தமிழ் என்று இன்பத் தமிழைப் பிளவுபடுத்தும் கோஷத்தை தனக்கு எடுபிடி வேலை செய்திடும் ஒரு சில தமிழ்த் துரோகிகளைக்கொண்டு கிளப்பி வருகிறது அரசு! இந்தத் துரோகிகளின் கூச்சலுக்குள் தமிழ் மக்கள் ஒருபோதுமே சிக்கி வீழ்ந்திடப் போவதில்லை!

தமிழ்நாட்டுக்கும், இந்நாட்டுத்தமிழர்களுக்குமிடையேஇருந்துவரும் உறவுகளையும், தொடர்புகளையும் துண்டிப்பதன் மூலம், இந்நாட்டுத்தமிழினத்தைதனிமைப் படுத்தி, பிரித்து அழித்துவிடுவதுதான் அரசின் சூழ்ச்சித் திட்டம்! இத்திட்டத்தின் ஓர் அம்சந்தான் தமிழக ஏடுகளுக்கு தடைவிதிப்பு!

நண்பா, அரசியலமைப்புக்களாலும், உப்புக் கடலாலும் ஈழத்தமிழ்நாடும், தாய்த் தமிழ்நாடும் பிரிக்கப்பட்டிருந்தாலும், மொழியால், கலாசாரத்தால், பழக்க வழக்கங்களால் பண்பாட்டால்-உறவு முறைகளால்-உள்ளத்து உணர்ச்சிகளால் இனத்தால் தமிழர் அனைவரும் ஒருவரே! இந்த உணர்வை முறியடித்திட ஆயிரம் குமாரசூரியர் சேர்ந்து வந்தாலும் முடியாது என்பதை நாம் அரசுக்கு எடுத்து உணர்த்திடவேண்டும்!

பத்திரிகைச் செய்திகளின்படி, தினமணி, தி. மு. க. சார்பு ஏடுகளான மாலை முரசு, தினத் தந்தி—ஆகிய நாளேடுகள் இங்கு இறக்குமதியாகாது அடுத்த சனவரியிலிருந்து! தமிழ் நாட்டு அரசியல் நடப்பினையறிந்திட ஆர்வத்துடன் தமிழ்நாட்டுநாள் ஏடுகளைப் புரட்டிடுவோர் நிலை இனி என்ன?

தி. மு. கழக ஏடுகள்—தமிழுணர்ச்சியை—இன உணர்வைத் தூண்டும் ஏடுகள் ஒன்றுகூட இங்கு இறக்குமதி செய்யப்படமாட்டாது! இவற்றுக்குப் பூரண தடை விதிக்கப்பட்டிருக்கிறது! அதேநேரத்தில் இந்திய திரிபுவாத கம்யூனிஸ்டுகளின் வார ஏடான ஜனசக்தியும், கம்யூனிஸ்ட சார்பு இலக்கிய ஏடான தாமரையும் இறக்குமதி செய்யப்பட அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது! சோசலிசம் பேசுவோர் ஆட்சியில் 'மாத ஜோதிடம்' வரலாமாம்; 'முரசொலி' மட்டும் வரக்கூடாதாம்!

'பேசும்படம்' போன்ற கலைத்துறை ஏடுகள் ஒன்றுகூட இனி இங்கு கிடைக்காமல் போய்விடும்!

இஸ்லாமிய, இந்து, கிறித்துவ மதசார்பான தமிழ் ஏடுகள் எதுவும் தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியாகாது!

குற்றுயிரும் குலையுயிருமாக—கண் துடைப்புக்காக இறக்குமதிக்கென இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள. சில ஆயிரம் 'கல்கி' ஆனந்த விகடன்' 'குமுதம்' போன்ற ஏடுகள் கூட காலப் போக்கில் நிறுத்தப்பட்டு விடுமாம்!

நண்பா, இந்நிலையை நாம் அனுமதிக்கப் போகிறேமா? நமக்கு இஷ்டமான ஏடுகளை இங்கு வரவழைத்துப் படித்திடக் கூட உரிமையற்ற அடிமை இனமாகவா நாம் வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறேம்? ஈழத் தமிழினத்தை கலப்புச்சாதி யென்ருர்கள்; பொறுத்துக்கொண்டோம்! வந்தேறு குடிகள் என்ருர்கள்; வாய் மூடி மௌனியாக இருந்தோம்; பரதநாட்டியம் இந்தியத் தமிழர்களுடையது —ஈழத் தமிழர்களுக்கு சொந்தமான நடனம் இல்லை; என்று நம்மைக்கேலி செய்து 'இந்தியா' 'இலங்கை' என்றுதமிழ்க்கலையை கூறுபோட்டு நம்மை அவமதித்தார்கள்; அமைதியாக இருந்தோம். இப்போது தமிழ் நாட்டு ஏடுகளை இங்கு இறக்குமதி செய்யக்கூடாது; என்று கட்டளை போட்டு தமிழ் நாட்டுக்கும் நமக்கும் திரை போட முயற்சிக்கிருர்கள். இதையும் நாம் பார்த்துக்கொண்டு இருக்கப் போகிறேமா?

கூடாது; கூடாது; இதற்கு எதிர்ப்புக் காட்டியே தீரவேண்டும் என்பாய்! ஆமாம், எதிர்ப்புக்காட்டியே தீரவேண்டும்! ஆனுல் எப்படிக்காட்டுவது? உடனடியாக செய்யக் கூடியது ஒன்றுளது!

'தமிழ் நாட்டு ஏடுகள் இறக்குமதிக்கு கட்டுப்பாடோ தடையோ விதிக்காதீர்; தமிழ் மக்களின் அறிவுப்பசிக்கு தடை போடாதீர்.'

'தமிழக—ஈழ உறவுக்கு வைக்காதே வேட்டு! தமிழ் நாட்டு ஏடுகளை வழமை போல் வரவிடுங்கள் இங்கு!'

'தமிழ் நாட்டு ஏடுகளைத் தடை செய்து தமிழர்களின் வெறுப்புக்கு ஆளாகாதீர்!'

என்பன போன்ற கோஷங்களைக் கொண்ட கண்டனத் தந்திகள் தமிழ் மக்களிடமிருந்து பிரதமரையும், அமைச்சர் குமாரசூரியரையும் நோக்கி நாள்தோறும் ஆயிரமாயிரமாகச் சென்று குவிய வேண்டும்!

## இன்றே பணி தொடங்கிடுக!

தமிழ்ப் பொது நலமன்றங்கள், தமிழ்ப் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், இளைஞர் இயக்கங்கள், வாலிப முன்னணிகள் ஆகியன தமிழக ஏடுகள் இறக்குமதித்தடையை எதிர்த்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி பிரதமருக்கும் குமாரசூரியருக்கும் அனுப்பி வைக்கவேண்டும்!

தமிழியக்கத் தொண்டர்கள் இத்துறையில் தீவிரமாகப்பணியாற்றிட வேண்டும்!!

இன்றே தொடங்கிடுக இப்பணி! தமிழர் எல்லோர்க்கும் இதனை எடுத்துக் கூறிடுக.

அன்புத் தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாவும் தமிழரும்

(சென்றவாரத் தொடர்)

1956 ஆம் ஆண்டுபண்டா ஆட்சிப்பீடம் ஏறிய போது இங்களம் மட்டும் சட்டத்தை ஆளும் மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார். அப்போது அவர் சிங்கள இனத்தின் இரட்சகராகவும், தமிழினத்தை வெற்றி கொண்ட "துட்ட கைமுனு" ஆகவும் போற்றப்பட்டார் என்பதையும் மறந்துவிட முடியாது!

தமிழைப் பிரதேச மொழியாக்குவதும் அதற்குச் சம அந்தஸ்துக் கொடுப்பதும் நாட்டைப் பிரிக்குமென வாதிட்ட பண்டா சிங்களம் மட்டும் சட்டத்தைப் புகுத்திய தன் மூலம் நாட்டை நிரந்தரமாகப் பிளவு படுத்தினார்.

"சோம்பிக் கிடக்கும் மகனைத் தட்டி எழுப்ப வேண்டுமானால் அவன் தாயைக் கொன்றுவிடு" என்பது ஒரு பழமொழி. சிங்களம் மட்டும் சட்ட மூலம் பண்டாரநாயக்கா தமிழைப் பொறுத்த வரையில் இதனையே செய்தார். 55இல் கலாநிதி பெரேராவின் பிரேரணைக்கு எதிரான பண்டாரநாயக்காவின்திருத்தம் ஈழ அரசுகளின் எதிர்காலப் போக்கு எப்படி இருக்கப் போகிறது என்பதைக் கோடி கட்டிக் காட்டியது.

### என். எம். சொன்னதென்ன?

சம அந்தஸ்து வேண்டிய கலாநிதி கூட "சிறுபான்மையோர் சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ள முன்வந்தால் அதற்காகச் சம சமாசக் கட்சியினரைவிட அதிகம் மகிழ்பவர் வேறு யாரும் இருக்க முடியாது...... இராசீக்பரீது அதுபோன்ற ஒரு கருத்தை வெளியிட்டார். அந்நிலை ஏற்பட்டால் நாம் மிகவும் மகிழ்வோம், அதுவரை சம அந்தஸ்தை இடைக்கால ஏற்பாடாக ஏற்று அவர்கள் அச்சத்தைப் போக்க அவர்களையும் சமமாக நடத்துவதாக உணரச் செய்ய வேண்டும்" என்று கூறுவதன்மூலம் சம அந்தஸ்து ஒரு தற்காலிக ஏற்பாடு; சிங்களம் மட்டுமே முடிவு என்பதை 55இல் வெளிப்படுத்திவிட்டார் கலாநிதி பெரேரா.

பண்டாரநாயக்கா ஏற்றி வைத்த தனிச் சிங்களத் தீபம் சிங்களத் தலைவர்களைக் கொண்ட எல்லாக்கட்சிகளாலும் ஒளி விளக்காகக் கொள்ளப்பட்டது.

### திருப்பு முனை

56ஆம் ஆண்டுத் தேர்தல் ஈழத்தின் வரலாற்றில் ஒரு புதிய, நிலையான திருப்பு முனை ஏற்பட்டதனை வெளிப்படுத்தின. சிங்கள மக்கள் கட்சி வேறுபாடின்றிச் சிங்களத்தை ஆதிக்க மொழியாக்க ஒன்றுதிரண்டதே அத்திருப்பம். தமிழ் மக்களும் இவ்வாறே அணி திரண்டனர்.

### தமிழ் தேசியத்தின் முழுவடிவம்

பொன் அருணாசலத்தால் ஏற்படுத்தப்பட்டு ஜீ. ஜீ. பொன்னம்பலம் முதலியோரால் அரை குறையாக வளர்க்கப்பட்டிருந்த ஈழத் தமிழ்த்தேசிய இன ஒருமைப்பாடு, செல்வநாயகத்தின் தலைமையில் பூரணம் பெற்றுத் தமிழுக்குச் சம அந்தஸ்து ஈழம் முழுவதிலும் கூட்டாட்சி என்ற நிரந்தர அரசியல் தீர்வினாலன்றி வேறெதனாலும் அழிக்க முடியாததாக உருப்பெற்றது 1956ஆம் ஆண்டிலேயாகும்.

சிங்கள மொழி, பௌத்த மதம் ஆகியவற்றை ஒப்புக் கொள்ளும் ஒரே தேசிய இனத்தை உருவாக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் அதற்கு எதிரான விளைவை ஏற்படுத்தியது மட்டுமன்றி அது எக்காலத்திலும் நிகழ முடியாத பகற் கனவு என்பதையும் உறுதி செய்தது. மட்டு நகரான், யாழ்ப்பாணி வன்னியான், திருமலையான், மன்னாரான் என்று சிதறிக் கிடந்த ஈழத் தமிழன் தனது பிரிவினையை விட்டொழித்தான். அதன் பேறாக ஈழத் தமிழகம், ஈழத்தமிழ் தேசிய இனம் என்ற உணர்வுகள் உறுதியாக ஏற்பட்டன.

என்றுமே ஏற்பட முடியாது எனச் சுயநலப் புலிகள் எண்ணிய தமிழ் தேசிய இன ஒற்றுமை செல்வநாயகத்தின் ஆற்றல் மிக்க தலைமையால் ஏற்படுத்தப்பட்டது. இவ்வொற்றுமைக்குச் செல்வா நேரடிக்காரணமெனினும் இதற்கான மறைமுக உந்து விசை பண்டாவினால் அளிக்கப்பட்டதென்பது சர்வதேசிய உண்மையாகும்.

### சென்ற இடமெல்லாம் கறுப்புக்கொடி

பண்டாரநாயக்கா சென்ற இடமெல்லாம்—அனைத்துலக நாடுகளிலும்-தமிழன் ஒன்று திரண்டு கறுப்புக்கொடி காட்டியதும் 'மலானின் மைத்துனனே திரும்பிப் போ' என முழக்கமிட்டதும் வெளி நாடுகள் கூடக் கண்டு களித்த நிகழ்ச்சிகள். பண்டாரநாயக்காவையும் அவரது ஏகாதிபத்திய வெற்றியையும் எதிர்க்கவே தமிழர் முதலில் ஒன்று திரண்டனர்.

பீட்டர்கெனமன் ஒரு முறை நாடாளுமன்றத்தில் பேசும் போது பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவுக்குத் தமிழர் யாழ்ப்பாணம் கச்சேரி முன் சிலைசமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார் யாழ் அரசாங்கச் செயலகத்தின் முன் இன்று செயலகத்தின் முன் இன்று செய்யாமையை நோன்பாகக் கொண்டிருந்த தமிழர் மீது காவற் படையை ஏவிச் செங்குருதி ஓட வைத்து அதன் மூலம் சத்தியாக்கிரகத்தில் தமிழர்கள் கட்சி வேறுபாடின்றிப் பங்கு கொள்ளவைத்தார் பீலிக்ஸ் —எனவே, பீலிக்சுக்குச் சிலை நிறுவ வேண்டுமென்றார் பீற்றர் (14-3-61)

### அடிமைத்தனம்

ஆம்! எம்மை அடிமை கொண்டு எம்மீது குதிரை விட்ட அந்நியர்களுக்குச் சிலை வடித்துப் பெருமை கொண்டதல்லவா எமது இனம்! இந்த வகையில் நோக்கும் போது பண்டாவின் பிறந்த நாள் கொண்டாடுவதும் அவருக்குச் சிலை எடுப்பதும் நியாயமான செயல்களே. எனவே சங்கிலியன் ஆண்ட யாழ்ப்பாணத்தில் ஏகாதிபத்திய அடிமைகள் பண்டாவின் படத்தை ஏற்றி வைத்திருக்கிறார்கள். வாழ்க யாழ்ப்பாணத் தமிழனின் அடிமைத்தனம்!

### புதிய புறநானூறு

'கடைசித் தமிழன் ஈழ மண்ணில் இருக்கும் வரை தூங்க மாட்டேன்' எனப் பண்டா கூறியதன் பொருள் 1956ஆம் ஆண்டு ஆனி ஐந்தாம் நாளில் முதன் முதலாகப் புலப்பட்டது. அன்று தான் காலி முகக் கடற்கரையில் ஈழத் தமிழனின் புதிய புறநானூறு எழுதப்பட்டது. தமிழர் மீதும் சிங்களம் மட்டும். மொழியைப் புகுத்துவதை எதிர்த்துத் தலை நகரிலே போராட்டம் நிகழ்ந்தது; பண்டா பாராளுமன்ற உப்பரிகையில் நின்று தமிழர்களைச் சிங்களப் பெருங்குடி மக்கள் உருட்டி உருட்டி எடுத்ததைப் பார்த்துக் களித்துக் கொண்டு நின்றார். அவர்களைத் தமிழர்கள் திருப்பித் தாக்கினால் பாதுகாக்கப் பெருங் காவற் படையையும் பண்டா காலி முகத்தில் நடமாட விட்டிருந்தார். பண்டா நீரோவையும் தாம் மிஞ்சியவர் என்பதை நிரூபித்தார். 'அவர்கள் சூடாக இருக்கிறார்கள் மழை பெய்ததும் குளிர்ந்து விடுவார்கள்' என்று ஆதிக்க புரியினருக்கேயுரிய இறுமாப்புடன் பண்டா கூறினார். தமிழர் அவருக்குத் தொடர்ந்து தலையிடி கொடுத்துக் கொண்டிருந்திதால் அவர் தூங்காமலே போய் விட்டார்.

### பழிவாங்கும் நிகழ்ச்சி

அதிகாரத்தைக் கைப்பற்றும்நோக்குடன் தாம்வேடிக்கையாகக் கொளுத்திவிட்ட [illegible] 'இலங்கா ககனம்' நிகழ்த்தும் என பண்டா எண்ணவில்லை. சிங்களம்மட்டும் தீ தமிழரின் உயிரைக் குடித்தது. நாடெங்கும் அல்லோல கல்லோலம். தம்மிடம் இருந்த அதிகாரத்தைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் பண்டா ஒரு வகுப்புக் கலவரத்தையே தடுத்து நிறுத்தியிருக்க முடியும்; ஆனால், அவர் தமிழரைப் பழிவாங்கும் 58ஆம் ஆண்டு வகுப்புக் கலவரத்தைப் பயன்படுத்திக் கொண்டாரென்பதை அன்று நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்தன;

சிங்களம்மட்டும் சட்டத்தில் ஆங்கிலத்திற்குக் கொடுத்த இடத்தைக்கூட பண்டா தமிழுக்குத்தர மறுத்து விட்டார். எனினும், இதனால் நாட்டின் நிலை குட்டிச் சுவராவதை உணர்ந்த பண்டா மீண்டும் தமிழரை ஏமாற்றும் சூழ்ச்சியில் ஈடுபட்டார்; அப்போது கருவுயிர்த்ததே "தமிழ்மொழி விசேட விதிகள்" (1958)

### சூழ்ச்சி

தமிழ்த் தலைவர்கள் சுதந்திரமாக உலாவினால் இச்சூழ்ச்சியினை அம்பலப்படுத்தி நாட்டில் எதிர்ப்பை உச்ச நிலைக்கு உருவாக்கி விடுவர் என உணர்ந்த பண்டா அவர்களைச் சிறை வைத்துவிட்டு எதேச்சாதிகாரமான முறையில் இச்சட்டத்தை உருவாக்கினார். இச்சட்டம் பண்டாரநாயக்காவின் தமிழர் நல விருப்புக்கு எடுத்துக் காட்டெனச் சிலர் எடுத்துரைக்க முன் வந்துள்ளனர். இது ஓர் இடைக்கால ஏற்பாடு என்பதை பண்டா தெளிவு படுத்தியுள்ளார். சிங்களத்தைத் தமிழருக்குக் கட்டாயமான இரண்டாவதுமொழியாக்கித் தமிழரனைவரையும் படிப்படியாகச் சிங்கள மொழி மூலம் எல்லாத் தொடர்புகளையும் ஏற்படுத்தச் செய்வதே தமிழ் விசேட சட்டத்தின் நோக்கம் என்பதை 5-8-1958க்குரிய அரசஅறிக்கையில் 31ஆம் தொகுதியைப் படிப்போர் நன்கு உணர முடியும்; அரசபணியில் சேர்வோர் அனைவரும் சிங்கள மூலம் பணியாற்ற நிர்ப்பந்திப்பதே இச்சட்டம். எனவே, பாடசாலைகளில் தமிழ்மொழி மூலம் பயிற்சிபெறுவது பயனற்றது என்று தமிழரே உணர்ந்து சிங்களத்தையே பயிற்சி மொழியாகக் கொள்ளும்படி தூண்டுவதே விசேட சட்டத்தின் மூலம் பண்டா ஏற்படுத்திய நிலையாகும்.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

தமிழ்த் தலைவர்கள் என்றுமே அடம் பிடிக்கும் சிறுவர்களாக நடந்துகொண்டது இடையாது. அவர்கள் எப்போதும் விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடனேயே நடந்துகொண்டனர்; இதனால் அவர்கள் தமது இறுதிக் குறிக்கோளைத் துறந்து விட்டனர் என்று பொருள் படாது. இவ் விட்டுக்கொடுக்கும் பண்பின் விளைவே பண்டா—செல்வா ஒப்பந்தமாகும்.

ஈழத்தில் ஒரே மொழி, ஒரே இனம் என்று ஆணவமாக உரைத்த பண்டா தமிழும் ஒரு பிரதேச மொழியாகும், தமிழரின் பிரதேச உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்என்பனவற்றை ஒப்புக்கொண்டு உடன்படிக்கை செய்தார். இவ் ஒப்பந்தத்தின் விளைவாக ஐ. தே. கட்சியினரின் கையோங்கும் என்பதை அறிந்த பண்டா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். இதற்குக் காரணம் என்ன? மக்களின் தீர்ப்பை மகேசன் தீர்ப்பாகப் பண்டா கருதினார் என்கிறார் பீலிக்ஸ். 'நாட்டில் குழப்பம் ஏற்படுவதால் மகிழ்ச்சியடையும் பண்புகொண்ட சிலர் மீண்டும் பண்டாரநாயக்காவுக்கு நெருக்கடியை உண்டாக்கினர். ஒப்பந்தத்தைக் கிழித்தெறியுமாறு செய்தனர்' என்றார்

## பொய்ப்பகையார்

சிவசிதம்பரம். (அரச அறிக்கை—18 ஆடி 6.1,) அஞ்சாநெஞ்சமும் அரசியல் உறுதியும் கொண்ட பண்டாரநாயக்கா தமது வாழ்வின் இறுதிப் பகுதியில் சந்தர்ப்பங்களாலும், சந்தர்ப்பவாதிகளாலும் வழி நடத்தப்பட்டார் என்பதனையே இது காட்டுகிறது. இதுவே அவரது வாழ்வின் முடிவுக்கும் காரணமாய் அமைந்தது.

### சோசலிச வாதியா

பண்டாரநாயக்கா சோசலிச வாதி என்ற புதிய படத்தை வரைவதில் தீவிர இடது சாரிகள் இன்று முன்னணியில் நிற்கும் திரிபுவாதத்தைக் காண்கிறோம். பண்டாரநாயக்கா உயிரோடு வாழும் போது அவரைப் படுபிற்போக்கு வாதியென மக்கள் மன்றத்திற்கு அறிமுகம் செய்த இடது சாரிகள் இன்று சோசலிச வாதி என்று போற்றுவது விந்தையாகவுள்ளது. கெட்ட பின்பு ஞானிகளானவர்கள் இவர்கள். பண்டாரநாயக்காவின் 'ஏக சிங்கள பௌத்த லங்கா' கொள்கையே தமக்கு உயர்வளிக்கு மென்பதை உணர்ந்து கொண்ட அவர்கள் பண்டாவின் தேசியமயக் கொள்கைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தமது எதிர்கால வாழ்வை வளமாக்க வெல்வெற்றுக் கதிரைகளைத்தேடிக்கொண்டு விட்டனர்.

(6-ம் பக்கம்பார்க்க)

## தங்க மந்திரிக்கு தமிழ்க்கவிஞர் பாராட்டு!

தங்கையலரைக் கவர சூரியர் ஓர் கதை அவிழ்த்தார்!
தங்கம் தருவாராம் தாலிக்கு! தாய்க்குலத்தார்
இங்கு தாலிக்கொடிக்குத் தங்கமின்றி இருந்தாராம்!
எங்கள் அமைச்சர் இனி அதனைத் தருவாராம்!
சூரியரே! சூரியரே! சூழ்ச்சிக்கோர் சூரியரே!
தமிழரசுக்கொடியைக் காத்திடத் தம்கழுத்துத்
தாலிக்கொடியையும் இழந்ததமிழ்க் குலம் இதையா!
தமிழை அழித்தாரை அழித்துவரத் தலைவனை
இமைப்பொழுதில் போருக்கனுப்பி அவன் இறக்க
தாலி இழந்து தாம்மகிழ்ந்த தமிழ்த்தாயர்
ஞாலப் பழம்பெருமை நன்கறியாச் சூரியரே!
பங்கம் தமிழுக்கிழைத்து தங்கம் தமிழுக்களித்தரல்
இங்கு தமிழ்ப்பெண்ணார் எத்தனைநாள் அதை
அணிவார்?
தாலிக்கொடிஇழந்து தமிழரசுக்கொடிஏற்றும்
கோலத் தமிழ்க்கொடியார் கூட்டத்தை விரைவினிலே
காலம் உமதிரண்டு கண்களுக்குக் காட்டுமையா!

— காசி ஆனந்தன்.

(காப்புறுதிக் கூட்டுத்தாபனத் தமிழ்விழாக் கவியரங்கம்)

# "கூப்பிடு பொலீசை"

இருநூறு வருடங்களின் முன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஒன்றை கடந்த அரசாங்கம் மூடும்படி உத்தரவு பிறப்பித்திருந்தது. இப்பாடசாலை நல்லூர் தொகுதியில் இருக்கிறது. இதை மூடுவதற்கு சில அரசியல் எதிரிகள் முன்நின்றுர்கள். இதை மூடிவிட்டால் அடுத்த தேர்தலில் இதை வைத்து நாகாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யலாம் என்பதே அவர்களின் எண்ணம். இது விடயத்தை நான் நாகாவிடம் எடுத்துக் கூறிய போது அவர் என்னையும் அழைத்துக் கொண்டு கல்வி மந்திரிடம் சென்றுர்.

அங்கு இப் பாடசாலை எவ்வளவு காலத்திற்கு முன் ஆரம்பிக்கப்பட்டது; இதனுல் எவ்வளவு மாணவர்கள் நன்மையடைகிருர்கள்; இதை மூடினுல் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றியெல்லாம் விளக்கிக் கூறிஞர். இது கல்விமந்திரி காதில் விழவில்லை. அவர் அதை இரத்துச் செய்யவில்லை! ஏன் அவரல்லவா மூடும்படி கட்டளையிட்டவர்!

நாகாவுக்குக் கோபம் வந்து விட்டது. இந்த ஐந்து வருடத்திலும் தமிழ்ப் பகுதியில் ஒரு பாடசாலை கூட புதிதாகத்திறவாத நீங்கள்- இருக்கும் பாடசாலையையும் மூடுகிறீர்களே என்று கர்ச்சித்தார்.

''என்னுடைய உத்தரவை மாற்ற முடியாது நாகா. இங்கிருந்து போய்விடும்'' என்றுர் மந்திரி — இல்லை, இந்த உத்தரவு மாற்ற வில்லையாயின் நான் இங்கிருந்து நகரமாட்டேன் என்றுர் நாகா.

போகாவிட்டால் பொலீசை அழைத்து உம்மை வெளியேற்றுவேன் என்றுர் மந்திரி. ''கூப்பிடு பொலீசை— நான் சுலபமாக நீதி மன்றம் போய் விடுவேன்'' என்றுர் நாகா. இருவரும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டு கர்ச்சிக்கத் தொடங்கினர்.

இச் சந்தர்ப்பத்தில் நாகாவுக்கு நெஞ்சு வலி வந்து விட்டது. நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்தார். உடனே மந்திரி பதறிப்போனுர். நாகாவுக்கோ அறிவு இல்லை. உடனேயே மந்திரி கோப்பி எடுத்து வரும்படி கட்டளையிட்டு விசிறியால் விசிறத் தொடங்கிவிட்டார். கோப்பி குடித்ததும் மயக்கம் தெளியவே நாகா எழுந்தார்.

மந்திரி உடனேயே அந்த கடிதக்கோவையை எடுப்பித்து தன் முன்னைய உத்தரவை இரத்துச் செய்தார். உடனே நாகா அவரைக் கட்டித் தழுவி தேர்தலில் இருவரும் வெல்ல வேண்டும்-திரும்பவும் நாம் சந்திக்க வேண்டுமென்று கூறி விடை பெற்றுர்.

நியாயமென்று தனக்குப்படுவதற்காக தன்னுல் முடிந்தவரை வாதாடும், போராடும்பண்புள்ளவர் நாகா''

—அடலேறு ஆலாலசுந்தரம்
(வவுனியா கூட்டத்தில்)




கு. கனகராணி,
ஆரையம்பதி—13

கே: வலையிறவுப் பாலத்துக்கு மைத்திரிபால சேனநாயகா வந்து அடிக்கல் நாட்டும் 'ராஜாதி ராஜ' திட்டம் என்னுச்சு?

ப: கல்லடிப்பாலத்தில் கற்பழிக்கப்பட்ட கன்னியர் போட்ட கூக்குரல் எப்படி காற்ருேடு காற்ருகக் கலந்ததோ அதுபோலவே இதுவும் கலந்தாச்சு!

கே: எழில் தமிழ் ஆளர் இராசதுரையின் பேச்சை பழிக்கும் தமிழ் துரோகிகளின் கூட்டத்தில் பேசக் கூடியவர்கள் இருக்கிருர்களா?

ப: ஏசக் கூடியவர்கள் நிறையப்பேர் உண்டு!

ஃ

செல்வி த. புஷ்பமாலா,
உரும்பராய் வடக்கு.

கே: திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் யாழ்ப்பாண எம். பீயானுல்......!

ப; மொழிப்பற்றும், இனப்பற்றும், விடுதலை வேட்கையும் துடிப்பும், இளமையும் சுறுசுறுப்பும் கடமையுணர்வும் மிக்க தமிழ் பெண்மணியொருவரை பிரதிநிதியாகப் பெற்ற புகழை ஈழத்தமிழ் நாட்டின் தலைநகரான யாழ்ப்பாணம் தட்டிக்கொண்டுவிடும். யாழ். தொகுதிக்கு இருந்து வந்த அவப்பெயரும் நீங்கி விடும்!

ஃ

சி. பிரதாபன்,
கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.

கே; சீடர்க்குப் பயந்து ஓடிய குரு இப்பொழுது என்ன செய்கிருர்?

ப: அஞ்ஞாதவாசம் செய்கிருர்!

ஃ

கரன்,
கட்டுடை.

கே: 'பிராந்திய செய்திகள்' என்ற சொல்லில் 'பிராந்தி என்கின்ற குடிவகையின் வாசனையிருப்பதால் அதை 'மாநில செய்திகள்' ஆக்கிய கழகத்தினர் இப்போது மது விலக்கையே இரத்து செய்யலாமா?

ப: கழகத்தினர் பிராந்தியச் செய்தியை மாநில செய்தியாக மாற்றியமைத்ததற்கு காரணம் 'பிராந்திய' என்பது வடசொல்லாக இருப்பதனுல்தான்! மொட்டந்தலைக்கும் முழந்தாழுக்கும் முடிச்சுப்போடுகிறீரே. நல்ல ஆளையா நீர்!

கே: தமிழரசுக்கட்சி தன் 20 ஆண்டுகளில் எத்தனை பொருளாதார திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டது என்று கேட்கிருன் கட்சி சார்பற்றவன் என்று கூறிக் கொள்ளும் நண்பன் ஒருவன் இதற்கு என்ன பதில் சொல்வது?

ப: தமிழரசுக் கட்சியிடம் தமிழ்ப் பகுதியின் ஆட்சி அதிகாரம் இல்லாத போது பொருளாதார திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது?

ஃ

கே. இராஜன்,
கொழும்பு—13.

கே: திருகோணமலைக்கு கல்வியமைச்சர் விஜயம் செய்தபோது மடத்தடிச் சந்தியில் தேசியக் கொடியுடன் தமிழரசுக்கட்சியின் பெரிய மூவண்ணக் கொடியும் பறந்ததாமே!

ப: இதில் என்ன தவறு! எமது மண்ணை ஆக்கிரமிக்க எண்ணும் சிங்கள வகுப்பு வெறியர்களின் எண்ணம் ஒருபோதும் பலிக்காது; எமது மண் தமிழ் மண்; இங்கு தமிழரசுக் கொடியே என்றென்றும் பட்டொளி வீசிப்பறக்கும் உரிமையுடையது என்பதை உணர்த்துவதற்காக துடிப்புள்ள தமிழ் இளைஞர்கள்யாராவதுதமிழரசுக் கொடியை அங்கு பறக்க விட்டிருக்கலாம்!

ஃ

எஸ். என். ஆர்.
ஏருவூர்.

கே: நாய் நன்றியுள்ள மிருகம். அதே நேரத்தில் மற்றைய மிருகங்களிடம் இல்லாத கெட்ட குணம் ஒன்றும் உண்டு. அது என்ன கூறுங்கள் பார்க்கலாம்?

ப: நாய் தனக்கு எலும்புத் துண்டு போடும் எசமானுக்கு நன்றியுடையதாயிருக்கும். அதே வேளையில் தன் இனத்தைக் கண்டால் எதிர்த்துச் சண்டை போடும்! இந்த நாய்க் குணம் தமிழனுக்கு வரக் கூடாது!

ஃ

தமிழ்ப் பட்டாளியன்,
பருத்தித்துறை.

கே: நான் என்ற அகங்காரம் உடைய மொட்டைகளைச் சாமியார் என்று கூற முடியுமா?

ப: 'ஆசாமியசரி' என்று கூறலாமே!

ஃ

கபிலன்,
முள்ளியவளை?

கே: நானே தமிழர்களின் தனிப்பெருந் தலைவன் என்று மார்தட்டும் குமாரசூரியருக்கு'மந்தி'(ரி)ப்பதவிகிடைத்ததும் தான் தமிழர்க்குச் சேவை செய்யும் எண்ணம் வந்ததோ?

ப: அவர் சேவை செய்திட வரவில்லையே! தமிழினத்தை அழித்தொழிக்கவல்லவா அவதாரம் எடுத்திருக்கிருர்?

ஃ

சி. சம்பந்தமூர்த்தி,
செங்கலடி.

கே: தனிப்பெரும் தலைவரின் பேச்சைக் காணவில்லையே. எங்கே ஓடி மறைந்து விட்டார்?

ப: 'நன்றி கெட்ட (தமது) கட்சி எம். பீக்களிலும் நாய்கள் மேலடா' என்று கூறிக்கொண்டு வெளிநாடுகளுக்கு ஓடி விட்டார்!

ஃ

ச. இரத்தினசிங்கம்,
வவுணதீவு.

கே: தமிழ்பிரதேசங்களின் அபிவிருத்தியில் அரசு பின் வாங்குவது ஏன்?

ப: அவை சிங்களப் பிரதேசங்களாக இல்லாததால்!

ஃ

பொ. கலைசெல்வி
ஏழாலை மேற்கு:

கே: ராஜாஜி வெளியிடும் கருத்துக்கள் உலகியலுக்கு ஏற்றவையா? அவைபற்றி தங்கள் கருத்தென்ன?

ப: மூதறிஞர் ராஜாஜியின் கருத்துக்கள் சில இன்றைய உலகியலுக்கு ஏற்றவையல்ல என்றுகருதப்பட்டாலும்கூட மதிப்புடன் கவனிக்கப்பட வேண்டியவை அவை என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது!

ஃ

சி: தவராசா,
கொக்குவில்.

கே: ம. பொ: சி: யைப் பற்றி சில வரிகள்...........!

ப: தமிழ்தேசிய எழுச்சிக்கு அவர் ஓர் அடையாளச் சின்னம்; தமிழ் பகைவர்களுக்கு அவர் ஒரு சிம்மசொப்பனம்; முத்தமிழின் முழு வடிவம்; மூவேந்தர்களின் வீரத்தையும் ஒருசேர எடுத்துக்காட்டும் தொங்குமீசை; உலகில் தமிழனுக்கு ஒரு துன்பம் என்றுல் அதற்காக இரத்தக் கண்ணீர் வடிக்கும் இதயம்; தமிழ், தமிழினம், தமிழ் நாடு வாழ தன்னையே அழித்துக்கொண்டுவரும் தியாக நெஞ்சம்-இவரே ம: பொ. சி!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி:

கே: சீன-அமெரிக்க உறவு எந்தமட்டில் இருக்கிறது?

ப: மிகவும் நெருங்கி வருகிறது—இரு நாடுகளும் இனி தோழமை பூண்டால், இத்தனை ஆண்டுகளாக இரு நாடுகளுக்குமிடையேயிருந்துவந்த பலப் பரீட்சைக்கு பலியான கோடிக்கணக்கான உயிர்கள் நிச்சயம் மாவோவையும் நிக்சனையும் சபித்துக்கொண்டேயிருக்கும்!

ஃ

கே: உலகம் அழியும் எனச் சிலர் ஐயப்படுகிருர்கள்— உங்கள் கருத்து?

ப: உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு'—என்று கருதுபவன் நான்: ஆனுல் அந்த உலகம் எப்போதோ அழிந்து விட்டதே!

ஃ

கந்த ஞானமுத்து,
கைதடி, தெற்கு-

கே: மதுவிலக்கை, தமிழ் நாடு அரசு ரத்துச்செய்து விட்டதே. எதிர்காலம் எப்படியிருக்கும்?

ப; ஒன்றும் ''குடி'' முழுகிப்போகாது!


வெட்டி ஒட்டப்பட வேண்டிய முகவரி—

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194ஏ, பண்டாரநாயக்கா வீதி
கொழும்பு-12

## நாகபந்தம்

நாகபந்தக் கவிதை யாக்கும் சக்தி ஆயிரத்திலொரு கவிஞருக்குத்தான் அமையும். ஒரு பாம்புக்கு (59 எழுத்துக்களில்) ஒரு வெண்பாவாக இரண்டு பாம்புகளுக்கும் இரண்டு வெண்பாக்கள் தலையில் தொடங்கி வால் ஈருக யாக்கப்பட்டுள்ளதுதான் நாக பந்தம் என்று அழைக்கப்படும். இத்தகைய சக்தி கைவரப்பெற்றவர் நமது ஈழத் தமிழ் நாட்டுக் கவிஞர்களில் ஒருவரான 'வன்னியூர்க் கவிராயர். அவர் சக்தி மீது பாடிய இரட்டை நாகபந்தக் கவிதையை இவ்வாரம் பிரசுரிப்பதில் சுதந்திரன் மகிழ்ச்சியடைகிறது.

ஆசிரியர்.




## சக்தி இரட்டை நாக பந்தம்

பாரான் சிறந்ததமிழ் பண்பாடு மீழமண்ணில்
ஊரா ளுயர்கண் மொழியாக—நேரே
கலையரசி மெய்யா யுதவிசெய்தா யேபூ
தலமதில்மே லேவாழ வே!

சீரார் நிதி, கல்வி, தேகவி ரந்தா நீ
பேரா ரதீத இராணீமகிழ்தா—நேராக
தாயேசிந் தையனு நின் ஞளுகையிற் தாளுக
நேயவித யந்தனில் வாழ் நீ!

—''வன்னியூர்க் கவிராயர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்

# தமிழினம் இன்று வடித்திடும் கண்ணீர் ஒருபோதும் அவம் போகாது!

## பாரதிவிழாவில் பொதுச் செயலாளர் முழக்கம்!

காலத்தால் அழிக்க முடியாத கன்னித் தமிழ் மொழி காலம் முழுவதும் சந்ததி சந்ததியாகப் பேணிப் பாதுகாத்துப் பெருமைப் படத்தக்கவீர வரலாறுகளைப் படைத்திட்ட தமிழ்மொழி ஆங்கிலேயர்களின் வருகையால் இருள் மயமாக்கப்பட்டது; அந்தநேரத்திலேதான் அடிமைப்பட்டிருந்த மக்களிடம் சுதந்திர உணர்ச்சி ஊட்டவும் இருளையகற்றி ஒளியையுண்டாக்கவும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழினத்தின் மத்தியிலே தோன்றினர்; தமிழினம் அடிமை நிலையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக ஆட்சிபுரியவேண்டுமென்ற அவாவினாலேயே இறுதிவரை சுதந்திர முழக்கம் புரிந்தார்".

இவ்வாறு— தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் "நல்லை ஞானசம்பந்தர்" ஆதீனத்தில் நடைபெற்ற "பாரதி விழா"வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தியபோது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"மனிதன் இறந்தபிறகு சிவலோகம் செல்வதற்குப் பாடுகின்ற காலத்தில் பாரதி தமிழினம் தலையெடுப்பதற்காகப் பாடினுர்."செந்தமிழ் நாடென்னும் போதினிலே புதுச் சக்தி பிறக்குது மூச்சினிலே என்ருர். தமிழினம் அடிமைகளாக நடத்தப்படுவதையும், மாற்ருன்காலில் மண்டியிட்டு தமிழன் வாழ்வதையும் கண்ட பாரதியின் நெஞ்சம் குமுறியது. எரிமலையிலிருந்து கற்குழம்பு வெளிவந்து வெடிப்பதைப் போல, "பாரதி" என்ற எரிமலையிலிருந்து "சுதந்திர வீர உணர்ச்சி" என்ற கற்குளம்புகள் வெடித்தன. உலக நாடுகளிலே வாழ்ந்து அந்தந்த நாட்டிற்காக முதுகெலும்பாக உழைத்தும் இறுதியில் அடிமைகளாக அனுதைகளாகத் தமிழன் நடாத்தப்படுவதைக் கற்பனையிலே கண்ட பாரதி அன்றே எண்ணினுர்......... தமிழன் வாழ ஒரு நாடு தமிழ்நாடு வேண்டுமென்று.........

### பாரதியின் கனவை நினைவாக்கிய அண்ணு

பாரதிகண்ட கனவு அவரது காலத்திலே நிறைவேருதபோதிலும் பாரதிக்குப் பின் தோன்றிய அறிவுலக மேதை அண்ணு அவர்கள் பாரதியின் கனவை நிறைவேற்றினுர்; தமிழனுக்கொரு நாட்டை தமிழ் நாட்டை உருவாக்கித் தந்தபர். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணும் என்று பாடியதோடு நில்லாது, பழைய கதைகளையே படித்துக்கொண்டிருந்த தமிழ் மக்களை பார்த்து யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவரைப்போல் இளங்கோவைப்போல் எங்குமே பிறந்ததில்லையென்று பாடினுர். இத்தனை புகழும் பெருமையும்படைத்த தமிழன் இன்று வாயிருந்தும் ஊமைகளாய் கண்ணிருந்தும் குருடர்களாய் வாழ்கின்ருனே என்றுதான் வேதனைப்பட்டார். ஈழத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஊமைகளாய் குருடர்களாய்த்தான் தமிழன் இன்று வாழ்கின்ருன்.



### எல்லாரும் இந்நாட்டு மன்னர்

இன்று அதிகாரத்திலிருப்பவர்களையே சோதிட நம்பிக்கைகள் ஆட்டிப் படைக்கும்போது, அக்காலத்தில் மூட நம்பிக்கைகளில் முழுவதும் மண்டிக்கிடந்த தமிழ் மக்களை தனது பகுத்தறிவுக் கவிதையினுல்தட்டியெழுப்பி எழுச்சியுறச் செய்து, ஏழை அடிமை என்றவர்க்க பேதங்களை யொழித்தார், ஆளுபவன்......ஆளப்படுபவன்...... என்ற நிலையினை மாற்றி "எல்லோரும்இந்நாட்டுமன்னர்" தான் என்று முழங்கினுர்.

தமிழை வாழவைக்கவே "பாரதி"தோன்றினுர். அவரது எண்ணம் செயல் மூச்சு அனைத்தும் தமிழ் தமிழ் என்றே ஒலித்தது. எமது நாட்டைப் பொறுத்தவரையில் "தமிழ்" என்று நாம் கூறியவுடன் சிலருக்கு நாராசம் பாய்ச்சுவதுபோலிருக்கிறது. இதற்கு ஒரு வாதம்-வகுப்புவாதம் என்று பெயர் சூட்டுகிருர்கள். இன்று வங்கியிலே தொடர்பு கொள்ளும் மொழி எதுவென்ற கேள்வி எழுந்துள்ளது. தமிழ் மக்களில் எத்தனைபேர் தமிழில்தான் தொடர்பு வைத்துக்கொள்வோம் என்று கூறுவதற்குத் தயாராக இருக்கின்ருர்களென்று கேட்கிறேன்.

### எல்லாம் தமிழியக்கம்

தமிழன் தமிழனுக வாழ வேண்டுமென்பதுதான் பாரதியின் குறிக்கோள். தமிழன் எதைச் செய்தாலும் தமிழிலேயே செய்யவேண்டுமென்ருர். தமிழன் தலையெடுப்பதற்கு, தேசமெல்லாம் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் ஒலிக்கச்செய்வோம் என்ருர்.

தமிழ் பெண்களை அழகில் சிறந்தவர்களென்று கூறிப் பெருமைப்பட்டார். எனது தமிழச்சியைவிட வேறு யார் அழகில் சிறந்தவர்கள் இருக்கிருர்கள் என்று கவிதையினுல் வர்ணித்தார்.

### அறம் ஒருநாள் வெல்லும்

அறத்தில் நம்பிக்கை வைத்து உழைத்தால் நிச்சயம் வெற்றியடையலாமென்ற தத்துவத்தை விளக்குவதுதான் அவர் தமிழ்மக்களுக்கு அளித்த "பாஞ்சாலி சபதம்" என்று கூறினுல் மிகையன்று! தாழ்வுற்ற இனமாக வாழ்ந்த தமிழினத்தையே பாஞ்சாலி சபதத்தில் காட்டினுர். தலைவிரி கோலமாக இருந்து, நீதி கிடைக்கும்வரை அறத்தில் நம்பிக்கை வைத்திருந்த "பாஞ்சாலி" தான் தமிழன்னையென்பது அவரது உயர்ந்த கற்பனை. துரியோதனன் தங்களுக்கிழைத்த கொடுமைகளையெல்லாம் இதயத்திலே தாங்கிக்கொண்டும், தம்பிமார் கொதித்தெழுந்த சமயத்தில் பொறுமைதான் பெரியது. அறம்நிச்சயம் வெல்லும் என்றுதான் தருமர் பணித்தார். கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்! காண்டீபம் வெல்லும்! இதுவே தருமரது வாக்கியங்களாக இருந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பலவகையிலும் நெருக்கப்பட்டு இன்று அனுதைகள் போன்ற நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிலையிலாவது தமிழினம் ஒன்றுபடுமா என்பதுதான் கேள்வி......? இனம் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லையென்றும்சொந்தசுயநலத்திற்காக கால் பிடித்தாவது வாழவேண்டுமென்று திருப்தியடையும் துரோகக் கூட்டத்தைப் பற்றித்தான் தமிழினம்விழிப்பாக இருக்கவேண்டும்; ஆனுல் ஒன்றுமட்டும் உண்மையாக நடக்கும்...காலம் மாறும்! காண்டீபம் வெல்லுமென்று தர்மர் கூறினுர், இன்று தமிழினம் விடுகின்ற கண்ணீர் நிச்சயம் தமிழினத்துக்கு சுதந்திர வாழ்வைத் தேடித்தரும். கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம் மாறும். பாரதி கண்ட கண்ட கனவு முழுமைபெற

வேண்டுமானுல் தமிழினம் தனக்கிடையில் இருக்கின்ற குரோதங்களை மறந்து தமிழ் வாழ தமிழினம் உயர அனைவரும் பாடுபடவேண்டும்;

---

## கட்சித்தோழர்களே! கவனம்! கவனம்!!

நீங்கள் தமிழரசுக் கட்சிக்காரரா? கோயிலுக்கு — சுவாமிக்கு பூமாலை வாங்கிக் கொண்டு போகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தப்பித்தவறி ஒரு அமைச்சர் எங்காவது கடைத்தெருவுக்கு வந்தவர் உங்கள் பக்கம வந்துவிட்டால் உங்களையறியாமலே தினபதியாரின் 'காமிராக்' கூலிகள் உங்களைப் போட்டோ பிடித்து விடுவார்கள். மந்திரிக்கு நீங்கள் மாலை போடப்போனதாக மறுநாள் தினபதியில் படம்வரும்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் தனக்குப் போட்ட மாலைகளோடு பெரியவர் செல்வா மந்திரி ஆரியதாசாவுக்குப் பக்கத்தில் நின்ருரல்லவா? அதைப் படம் பிடித்து அத்தாணி மண்டபத்தில்போட்டு மந்திரியை பெரியவர் செல்வா மாலை மரியாதையோடு வரவேற்ருர் என்று திரித்து வெளியிட்டிருக்கிருர் தினபதியார்.

போக்கிலி தினபதி யாருக்கு பொய்தான் செய்தி! பொன்னுக்கும் பொருளுக்கும தன் மானத்தை விற்பதே கொள்கை! புரட்டுத் தான் பொழுதுபோக்கு!

தமிழரசுத் தோழர்களே! கவனம்! போலித் தினபதியாரின் கூலிக் காமிராக்கள் உங்களைப் புகைப்படம் பிடிக்கும் கவனம்!

---

## பண்டாவும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மனமுறிவுற்றுக்கிடந்த இடது சாரிகள் தமக்கு வாழ்வளித்த போதிசத்துவரான பண்டாவை நவீன லெனின் எனக்கொண்டாடுவதில் தமிழர்களுக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை. ஆனுல், தமிழர்கள் பண்டாவை மாமேதை லெனினின் மறுபிறப்பு என ஏமாறத் தயாராக இல்லை என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளும் காலம் அதிக தொலைவில் இல்லை; பண்டாவை இடதுசாரிகள் தலைமேற்கொண்டாடுவது இடதுசாரிகளின் அழிவுக்கு வழி வகுத்து வருவதையே தமிழ் மாநிலங்களில் நிகழும் செயல்கள் மூலம் அறிகிருேம்.

பண்டா தமிழரைச் சட்டத்தின் மூலம் பெரும்பான்மையினரின் அடிமைகளாக்கியவர். அவர் தமது இறுதிக் காலத்தில தமிழரின் நலனைச் சிதைப்பதையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்தவர்; அவர் வாழும் வரை ஒரு தமிழனுவது அவரைத் தனது தலைவனுக ஒப்புக்கொண்டது கிடையாது. இவ்வுண்மைகளைத் தமிழர் உணர்ந்துகொண்டு காக்கை வன்னியர்களையும் எட்டப்பர்களையும் விரட்டி அடித்தால் எமது எதிர்காலம் உரிமைவாழ்வு நிறைந்ததாக மலரும்.

---

# இஸ்லாமிய தமிழர் இயக்கம்

'தமிழ் மொழிக்கோ தமிழர்களுக்கோ ஆபத்துநேரிட்டால் அரபுமொழி பேசும் முஸ்லிம் மக்களே அதனை விரும்பமாட்டார்கள்.'

—இவ்வாறு திருகோணமலையில் நடைபெற்ற தமிழ் தின விழாவில் பேசியிருக்கிருர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்முத் அவர்கள். அமைச்சரது பேச்சு 4-10-71 வீரகேசரியில் வெளிவந்திருக்கிறது;

ஈழத்து முஸ்லிம்கள்—இஸ்லாமியத் தமிழர்கள் பேசும் மொழி அரபு என்பதே அமைச்சர் கூற்றில் பொதிந்துகிடக்கும் கருத்தாகும்.

தமிழைப்பேசி, தமிழையே மூச்சாகக்கொண்டு தமிழுக்காக உழைத்து தமிழை வளப்படுத்திவரும் இஸ்லாமியத்தமிழ் இளைஞர்களே, அறிஞர்களே! அமைச்சர் கூறியதுபோல நீங்கள் பேசும் மொழி-உங்கள் தாய்மொழி —அரபுமொழிதானு? நீங்கள் அழகுதமிழ் • தாய்பெற்ற செல்வங்களில்லையா? அரபுமொழியையா அழகு தமிழையா நீங்கள் நேசிக்கின்றீர்கள்? பேசுகின்றீர்கள்?

நீங்கள் தமிழைப்பேசுவது உண்மையானுல் — நீங்கள் தமிழை நேசிப்பது உண்மையானுல்—அமைச்சரின் இந்த அபத்தமான கருத்தை மறுக்காமலிருக்கலாமா?

இஸ்லாமிய தமிழ் இளைஞர்களே, உங்கள் உள்ளங்கள் ஆர்ப்பரித்தெழட்டும்! எடுங்கள் உங்கள் பேனுவை! அமைச்சரின் கருத்துக்கு உங்கள் கண்டனங்களை யெழுதி உடனே எமக்கு அனுப்புங்கள். தமிழே நம் மூச்சு என்பதை நிலைநாட்டுங்கள்!

—ஆசிரியர்:

---

## அண்ணு, வன்னியர் பாதை தொடர்வோம்!

(மாறன் யூ. செயின்)

முத்திரண்டு கிடைத்தனவே
முத்தமிழ்ப் பரம்பரையில்
வித்தகனும் அண்ணுநம்
விழுமியவன் னியசிங்கம்
இத்தமிழ் நல்லுலகின்
எழுச்சிக்காய்ச் செய்தவைகள்
எத்தமிழ் மொழிமகனும்
எண்ணுமல் முடிந்திடுமா?

மூவேந்தர் காலத்தின்
முத்தமிழ்ப் பெருமைகளை
நாவேந்தன் அண்ணுநம்
நாளிலேயே தமிழகத்தில்
காவேந்த னய்வந்து
காத்ததமிழ் இனக்கதையை
பாவேந்தர் பலரெல்லாம்
பாட்டால் புகழலையா?

ஈழத்தில் வாழ்கின்ற
எங்களது தமிழ்மொழியை
ஆழத்தில் கொண்டெங்கோ
அழித்துவிட நினைக்கையினில்
வேழம்போல் வன்னியனுர்
விண்ணதிரப் போர்முழங்கி
விழுப்புண்கள் பெற்றகதை
வேருக அமையலையா?

அண்ணுவும் வன்னியரும்
அரியதமிழ் இனத்துக்காய்ப்
பண்ணியதம் கொள்கைகளின்
பாதைவழி தொடராமல்
எண்ணியபல் விதமெல்லாம்
எட்டப்பர் கொள்கையினில்
போவதனுல் என்னபலன்
பொல்லாங்கு சேராதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பல்கலைக் கழக இயக்கத்தின் கரு — நாவலர் கழகம்!

## அதை அழியவிடாமல் பாதுகாப்பது தமிழ்பேசும் மக்களின் உடனடிக் கடமை!

தமிழர் தம்மொழியைப் பண்பாட்டை நாகரீகத்தை வாழ்வியல்முறையைப்பேணி தமது தனித்தன்மையை நிலைநாட்டுவதற்கு ஒரு பல்கலைக்கழகம் தமிழருக்கென தனியேவேண்டும் என்ற கருத்து தமிழ் அறிஞரிடை தோன்றியது. தோற்றுவிக்கப்படும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை வடக்கையும் கிழக்கையும், இணைக்கும் முறையில் திருமலையில் நிறுவி ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களை ஒன்றுபடுத்தி செயற்படுத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது: இவ்வெண்ணத்தின் விளைவாகவே தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1956ல் தொடக்கப்பட்டது.

### இயக்கத்தின் கரு நாவலர் கழகம்

இப்பல்கலைக்கழக இயக்கத்தினர் இயங்குவதற்கு நாவலர் கழகமும் கொழும்பில் — வெள்ளவத்தையில் தோற்றுவிக்கப்பட்டது. நாவலர் கழகத்திலேயே தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்தின் முக்கிய கூட்டங்கள் நடைபெற்றதோடு தமிழ் மாணவர்கள் பட்டப்படிப்பு உட்பட உயர்கல்வி பெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளும் செய்யப்பட்டது. காலப்போக்கில் நாவலர் கழகத்தில் பயிலும் மாணவர்களை திருமலையில் தோற்றுவிக்கப்படும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் சேர்ப்பதென்றும் அல்லது தேவையையொட்டி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இணையாக நாவலர் கழகத்தை தொடர்ந்து இயக்குவது என்ற கருத்தும் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினரிடையே நிலவியது.

### தமிழ் பல்கலைக்கழகத்தின் நிலை

இப்பெருநோக்கோடு திருமலையில் தமிழ்ப்பல்கலைக் கழக இயக்கம் திருமலை நகரீப்பிரிவிலும் உப்புவெளியிலும் பல ஏக்கர் காணிகளை வாங்கியது. அதுமட்டுமல்ல பல்கலைக்கழகத்தை தோற்றுவிப்பதற்கு கால கோள் (அத்திவாரத்தையும்) விழாவினையும் சிறப்புற நடத்தியது. ஆனால் இப்பல்கலைக் கழகத்தை தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் மருந்தளவும் ஆதரவை அளிக்க மறுத்ததோடு தமிழ்ப்பொது மக்களும் போதிய நிதிஉதவியைத்தரவில்லை. அத்துடன் சிங்கப்பூர், தமிழ்நாடு முதலிய நாடுகளில் இருந்து பணத்தை சேகரித்துக் கொண்டுவருவதற்கும் அரசாங்கம் தடைவிதித்தது?

### திருமலையில் வேளாண்மைக் கல்லூரி

இந்நிலையில் தோல்வியை முற்றாக ஏற்காது திருமலையில் வேளாண்மை கால் நடைக்கல்லூரி ஒன்றை பல்கலைக்கழக இயக்கம் தோற்றுவித்தது. இக்கல்லூரிக்கும் அரசாங்க ஆதரவு இல்லை. தமிழ்ப் பொதுமக்களும் காட்டவேண்டிய அக்கறையைக் காட்டவில்லை. எனினும் நல்ல ஒரு எதிர் காலத்தை எதிர்பார்த்து இக்கல்லூரி தொடர்ந்து இயக்கபபடுகிறது.

### பொருளாதார நெருக்கடி

இதேவேளையில் நாவலர் கழகத்தையும் பல்கலைக்கழக இயக்கம் தொடர்ந்து இயக்கிவந்தது. நாவலர் கழகம் சில காலங்களில் இயக்கத்திற்கு வருவாயைத் தந்தும் சில காலங்களில் நட்டத்தை ஏற்படுத்தியும் இயங்கியது. ஆனால் அண்மைக் காலத்தில் நாவலர் கழகத்தை தொடர்ந்து இயக்க முடியாத பொருளாதார நெருக்கடி தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

**ஈழவேந்தன்**

### நாவலர் கழகத்திற்கு இந்நிலை ஏன் ஏற்பட்டது?

இவ்வித வருந்தத்தக்க நிலை ஏற்பட்டதற்கு நாவலர் கழகத்தை நிர்வகித்தவர்கள் மீது சிலர் குறை கூறுகிறார்கள்; மற்றும் சிலர் தமிழ் பொதுமக்களும் குறிப்பாக தமிழ் மாணவர்களும் — தமிழ் விரிவுரையாளர்களும் காட்டிய கவனம் போதாததே இந்நிலைக்குக் காரணம் என்று கூறுவர்; குற்றம் யாருடையது என்ற ஆராய்ச்சியில் இறங்கி ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்துவதினால் எம்மை எதிர்நோக்கும் சிக்கலை — பிரச்சினையை யாம்தீர்க்க முடியாது.

### தமிழன் தற்கொலை செய்வதா?

கொழும்பில் எத்தனையோ உயர் கல்விக்குரிய நிலையங்கள் வருவாயைத் தந்து நல் முறையில் இயங்குகையில் நாவலர் கழகத்தை நல் முறையில் நடாத்த முடியாது தத்தளிக்கவிட்ட குற்றம் தமிழர்களாகிய எம் அனைவரையுமே சாரும். ஆகவே ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்தி பழிவாங்கும் முயற்சியில் ஈடுபடாது 1956ம் ஆண்டு தொட்டு 1971ம் ஆண்டு வரை அதாவது 15 ஆண்டுகளாக பல நெருக்கடிகளுக்கிடையிலும் கட்டிக் காத்துவந்த நாவலர் கழகத்தையாம் மூடுவதோ- பறிகொடுப்பதோ எம்மை யாம் அழிக்கும் தற்கொலை முயற்சியாகும்.

### இரண்டு இலட்சத்தை இழக்க நேரிடும்

நாவலர் கழகத்தை யாம் மூட நேரின் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியுடைய கழகத்தின் தளபாடங்கள் ஆய்வுகூட கருவிகள், விலை மதித்தற்கரிய நூல்கள், தற்காலிக தேவைகளென கட்டியெழுப்பப்பட்ட கட்டடங்கள் மற்றும் இன்னோரன்னவற்றை யாம் முற்றாக இழக்க நேரிடும்.

### நாமகளுக்கு விழா நாவலர் கழகத்திற்கு மூடு விழா

நாடெங்கும்— நகரெங்கும நாமகளுக்கு விழா வெடுத்து பல்லாயிரக் கணக்கில் செலவு செய்து சிந்தை நிறைவு எய்துகிற நாம் நாமகளின் இருப்பிடமாய் விளங்கும் நாவலர் கழகத்தை — கலைக் கல்லூரியை — காப்பாற்ற முடியாது 'மூடு விழா' நடாத்த முனைகிறோம்- முந்துகிறோம் என்றால் எவர் தான் எம்மைப் பார்த்து எள்ளி நகையாது இருப்பர்; கலைமகளின் இருப்பிடம் கலைக் கல்லூரி. அந்தக் கல்லூரியைக் காப்பாற்றி — தமிழ் இனத்தின் அறிவுத் தாகத்தைத் தீர்க்க முனையாத யாம் காசை நீராய் இறைத்து கலைமகளுக்கு விழா எடுப்பதிலே என்ன பொருள்? எம்மை இந்நாட்டின் ஒரு பகுதியினர் ஏமாற்ற — எம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு இறுதியில் இறைவனையே யாம் ஏமாற்றத் துணிந்துவிட்டோம்.

### மூன்றரை இலட்சத்தை முப்பது இலட்சத்தால் கொடுக்க முடியாதா

நாவலர் கழகம் இன்றும் ஒரு வாடகைக் கட்டடமாகவே விளங்குகிறது. இக்கட்டடத்தை விலைக்கு வாங்குவதற்கு ஏறக்குறைய மூன்றரை இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஈழத்தில் ஏறக்குறைய 30 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறோம்: 30 இலட்சம் தமிழர்களால் 3½ இலட்ச ரூபா கட்டடத்தை வாங்கி தமிழ் இளைஞர் சமுதாயத்தின் நிலைத்த நலனைப் பேணும் முறையில் பணியாற்ற முடியாவிட்டால் நாம் தமிழரென இங்கு வாழ்வதிலே என்ன பயன்? என்ன பொருள்?

### எம் கடனென்ன?

எம்மை நாம் காப்பாற்ற விரும்பாத நிலையில் எம்மை ஏனையவர் காப்பாற்றுவர் என்று எதிர்பார்ப்பதுபோல் மடமையின் முழுமையை யாம் எங்கும் காண முடியாது. தமக்குத் தாம் உதவியாய் இருப்பவர்களுக்குத் தான் இறைவன் துணையாய் இருப்பான் (God helps only those who help themselves) என்ற பாங்கான பழமொழியை மறவாது இன்றே செயலாளர், தமிழ் பல்கலைக்கழக இயக்கம், நாவலர் கழகக் கட்டடம், அலெக்சான்டிரா வீதி கொழும்பு-6. என்ற முகவரியுடன்தொடர்புகொண்டு எம் வருங்கால வழித்தோன்றல்கள் எம்மீது வசைமாரி பொழியாத முறையில் வாழ்வளித்து வளம் ஊட்டும் பணியில் ஈடுபடுவோமாக.

## முத்தமிழ் விழா

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள கல்வி, கலை, கலாசார, சனசமூக நிலையங்கள் போன்றவைகளை ஒருங்கிணைத்துச் செயற்படுவதில், கல்வி, கலை, கலாசாரக் காப்புக் கழகம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வடக்குக் கிழக்கிலுள்ள மேற்படி கழகம், மன்றம், நிலையங்களை இணைத்துப் பொதுச்சபை ஒன்றினை அழைத்து எதிர்வரும் தை மாதத்தில், யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் விழா ஒன்றினை மிகப் பிரமாண்டமான முறையில் மூன்று தினங்கள் நடாத்த, கல்வி, கலை கலாச்சாரக் காப்புக் கழகம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் செயற்படுத்தப் பல கழகங்களுடன் தொடர்புகொண்டு, இவ்விழாபற்றியும் தமது அமைப்பின் நோக்கங்களையும் எடுத்துக் கூறும் முயற்சியில், மேற்படி கழகச் செயலாளர் ஓவியர் ச. பெனடிக்ற், உபசெயலாளர் திரு. ந. ஆனந்தவிநாயகம் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

முத்தமிழ் விழாவில் நாடகப் போட்டி, பேச்சுப் போட்டி, கவியரங்கு என்பன அகில இலங்கை ரீதியில் நடத்தப்படுவதோடு, ஈழத்திலே தமிழ் வளர்த்த பெரியாரின் உருவந்தாங்கிய அழகான ஊர்வலங்களும் ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது.

கலை நிகழ்ச்சிக்குப் பிரபல தென்னிந்திய நாடகக் கலைஞர் திரு. டி. கே. பகவதி அவர்களையும், இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களையும் அழைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுநோக்கில் இயங்கும் மன்றங்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு க. க. கா. கழகம் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றது.

தொடர்பு முகவரி: செயலாளர், கல்வி, கலை, கலாசாரக் காப்புக்கழகம், 28, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

## சங்கப் பலகை

நூல்: பெண்ணே நீ பெரியவள் தான்
ஆசிரியர்: பொ. சண்முகநாதன்.
விலை: ரூபா 1-25.
வெளியிட்டவர்கள்: தமயந்தி பதிப்பகம், அச்சுவேலி.

மற்றவர்களை சிரிக்கவைப்பதென்பது இலேசான காரியமல்ல; வாழ்வில் பல்வேறு தொல்லைகளுக்கும் மனச் சுமைகளுக்கும் உட்பட்டு அழுந்தும் மனிதர்களை சற்று நேரம் கவலையை மறந்து சிரிக்கவைப்பதென்பது மனித இனத்துக்கு செய்யக் கூடிய அரும்பணியாகும். இந்த ஆற்றல் கைவரப்பெற்றவர்கள் வெகு சிலரே. அதுவும் வெறுமனே சிரிக்க மட்டும் வைக்காது சிரிப்புடன் சிந்தனையையும் தூண்டும் வகையில் எழுதக்கூடிய நகைச்சுவை எழுத்தாளர்களை தமிழ் இலக்கிய உலகில் விரல் விட்டெண்ணிவிடலாம். சிரிப்பும் சிந்தனையும் கொண்ட கதைகளை எழுதுவதில் தனக்கென தனி இடம் வகிப்பவர் அன்பர் பொ. சண்முகநாதன். அன்னாரது நகைச்சுவைக் கதைகளின் முதலாவது தொகுப்பு 'கொழும்புப் பெண்' என்பது வாசகர்கள் அறிந்ததே. இப்பொழுது அவரது இரண்டாவது தொகுப்பாக 'பெண்ணே நீ பெரியவள் தான்' வெளிவந்திருக்கிறது.

இந்நூலில் திரு. சண்முகநாதனின் பன்னிரண்டு கதைகள் அடங்கியுள்ளன: வாழ்வின் பல்வேறு துறைகளில் உள்ளவர்களை கதாபாத்திரங்களாக்கி, ஒவ்வொரு கதையிலும் உலாவவிட்டு, படிப்போரை சிரிப்புக் கடலில் ஆழ்த்தும் ஆசிரியர், தமக்கே கைவந்த நகைச்சுவையினூடாக சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கும் ஊழல்களையும் மூட நம்பிக்கைகளையும் சாடுகிறார்.

அன்பர் செங்கையாழியான் கூறியுள்ளது போல, சண்முகநாதனின் இந்நூல் படிப்போருக்கு உவகை தரக்கூடியது; படித்து முடித்ததும் மன நிறைவைத் தருவது; சிரிப்பதற்கு மட்டுமன்றி சிந்திப்பதற்கு முரிய அரிய கருத்துக்கள் பல இந்நூலிலுள்ளன.

தமயந்தி பதிப்பகத்தினர் நல்ல தாளில் அழகாக வெளியிட்டுள்ளனர். ஓவியர் வி. கே. யின் அட்டைப்படம் நூலுக்கு தனி அழகைத் தருகிறது.

★

நூல்: மறந்து விடாதே.
ஆசிரியர்: தாளையடி சபாரத்தினம்
விலை: ரூபா 2-25
வெளியிட்டவர்: திருமதி மீனு சபாரத்தினம், உடுப்பிட்டி.

தமிழ்ச் சிறுகதை உலகின் ஒளிமாமணிகளுள் ஒருவராகத் திகழ்ந்தவர் அமரர் தாளையடி சபாரத்தினம் என்பதை தமிழ் இலக்கிய உலகம் மறுபேச்சின்றி எப்பொழுதோ ஒப்புக்கொண்டு விட்டது. தனக்கேயுரிய காம்பீரியமான — அழகும் எளிமையும் நிறைந்த எழுத்தோவியங்களால் ஈழத் தமிழ் நாட்டின் வாசகர்களை கவர்ந்தவர் தாளையடி சபாரத்தினம்.

தாளையடியாரின் முதலாவது சிறுகதைத்தொகுப்பு நூலான 'புது வாழ்வு' வெளிவந்து 1970ம் ஆண்டின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சாதனையைக் கண்டோம்.

'மறந்துவிடாதே' என்னும் தாளையடியாரின் குறுநாவல் இரண்டாவது நூலாக இப்போது வெளிவந்துள்ளது.

தமிழ் இலக்கியப் படைப்பாளிகளையும், அவர்களது குடும்பத்தினரையும் தமிழ் மக்கள் கைவிடமாட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கு ஒரே வழி இத்தகைய நூல்களை ஒவ்வொரு தமிழனும் தவறாது வாங்குவதே.

★

நூல்: நெஞ்சம் கனிந்தது.
ஆசிரியர்: திமிலைக் கண்ணன்.
வெளியீடு: இராஜம் பிரசுரம், திமிலைத்தீவு, மட்டுநகர்.
விலை: ரூபா 1-00.

மட்டுநகர் ஈன்றெடுத்த கவிஞர்களுள் ஒருவரான திமிலைக் கண்ணன் திமிலை கிராமத்தில் கோயில்கொண்டெழுந் தருளியிருக்கும் திருமாலவன் மீது பாடிய பக்திப் பாடல்களின் தொகுப்பே இந்நூல். உள்ளம் கனிந்து பக்தி வெள்ளத்தில் தன்னை யறியாமலே மூழ்க வைக்கின்றன சுவை சொட்டும் இவரது கவிதைகள்.

★

நூல்: என் நோக்கில் ஆனந்தகுமாரசாமி.
ஆசிரியர்: ஈழவேந்தன்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுவதில் வல்லவரான ஈழவேந்தன் கலாநிதி ஆனந்தக் குமாரசாமி அவர்களைப் பற்றி முற்றும் புதிய கோணத்திலிருந்து ஆராய்ந்து 'என் நோக்கில் ஆனந்தக் குமாரசாமி' என்றோர் கட்டுரையை சுதந்திரனில் முன்பு எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே. அக்கட்டுரையை இப்போது நூல்வடிவில் ஈழவேந்தன் வெளியிட்டுள்ளார். தமிழர் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய ஆராய்ச்சிக் கருவூலம் இந்நூல். விலை சதம் 50.

கிடைக்குமிடம் ஈழவேந்தன், 150, சுபத்திரராம வீதி, நுகேகொடை.

## வரப்பெற்றோம்

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களைப் பற்றி பலர் எழுதிய கட்டுரைகளையும், விபரங்களையும், உள்ளடக்கி எம். ஜி. ஆர். இளைஞர் மன்றத்தினர் வெளியிட்டுள்ள முதல் ஆண்டு வெற்றி மலர் வரப் பெற்றோம் விலை சதம் 60; கிடைக்குமிடம்: ... 101/2 மீருனியா வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ‘சனநாயகத்துக்குச் சவக்குழி தோண்டுகிருர் அமைச்சர் குமாரசூரியர்!

## அமைதி தவழுகிறது தமிழ் பிரதேசங்களில்! அவசரகாலச் சட்டம் அங்கு ஏன்?’

## பத்திரிகைத் தணிக்கையை மேலும் தொடர வேண்டிய அவசியம் என்ன?

### நாடாளுமன்றத்தில் செல்லத்தம்பு கர்ச்சனை!

தமிழரசு எம். பீக்களுக்காக கதவுகள் திறந்திருக்கும்; தேவைகளை சொல்லுங்கள்; செய்வது எமது கடன்’ என்கிற தலைப்பில் அமைச்சர் கே. பி. இரத்னுயக அளித்த பேட்டியொன்று 3-10-71 தினகரன் வாரமஞ்சரியின் முதல் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. தமிழரசு பா. உ. க்கள் தமது தொகுதிகளின் தேவைகளை அமைச்சர்களிடம் எடுத்துச் சொல்ல முன்வருகிறுர்களில்லை யென்று அபாண்டம் சுமத்தியிருக்கிறுர் திரு. இரத்னுயகா இப் பேட்டியில். ஆனால் தொகுதி தேவைகளை எடுத்துக்கூறிய தமிழரசு பா. உ. க்கள் சிலரை எவ்வளவு அலட்சியமாக — அவமதிப்பாக — ஆட்சியிலுள்ள சில மந்திரிகள் நடத்தியிருக்கிறுர்கள் என்பது கே. பி. இரத்னுயகாவுக்கு தெரிந்திராமல் போகாது. மதியாதார் முற்றம் மிதித்திடும் மானங்கெட்டவர்களா தமிழரசு பா. உ.க்கள்?

—இதோ, 9-9-71ல் நாடாளுமன்றத்தில் அமைச்சர் குமாரசூரியரின் கபடவேடதாரித்தனத்தை அம்பலப்படுத்தி வவுனியா, பா. உ. திரு. செல்லத்தம்பு ஆற்றிய உரை. கே. பி. இரத்னுயகாவின் ஆஷாடபூதித்தனத்துக்கும் இதில் பதில் இருக்கிறது...!

நாட்டில் எழுந்த பயங்கரவாத நடவடிக்கைகளின் பயனுக இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய மூன்று பாதுகாப்புப் படைகளுக்கான செலவு ஐந்து கோடியில் இருந்து 16 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது: அதாவது ஏறத்தாழப் பத்துக் கோடி அதிகரிக்கப்பட்டிருக்கிறது; இது 300 வீதத்துக்கும் அதிகமானதாகும்.

பயங்கரவாதிகளுக்கு அரசாங்கம் தரவிருக்கும் பதில் இத்தகையது தானு? இராணுவ, கடற்படை, விமானப்படைச் செலவினங்களை அதிகரிப்பதன் மூலம் தான் இந்நாட்டைக் கட்டியாள முடியும் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன்: இந்நாட்டின் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போர் புரியுமளவுக்கு இந்நாட்டு இளைஞர்களைத் தூண்டிய காரணங்கள் எவையென்பது குறித்து அரசு பரிசீலனை செய்ததா என்று அறிய விரும்புகிறேன்.

### இறுதிப் பதில் இதுவா?

இந்நாட்டின் 2500 வருட கால சரித்திரத்தில் முன் எப்பொழுதுமே நடந்திராத சம்பவம் இது. இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் செலவீனங்களை மும்மடங்காக்குவதன் மூலம் பயங்கரவாதிகளுக்கு இறுதிப் பதில் தர முடியும் என்று அரசாங்கம் விசுவாசமாகக் கருதுகிறதா? அது தான் அரசாங்கத்தின் முடிவாக இருந்தால், இதுமாதிரியான பயங்கரவாத நடவடிக்கைகள் இந்நாட்டில் மூற்றுப் பெறப் போவதில்லை: பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழி பாதுகாப்புப் படைகளின் தொகையை அதிகரிப்பது ஆகாது என்பதே எங்கள் கருத்து:

சபாநாயகர்:- இது இறுதிப் பதில் அல்ல; இடைக்காலப் பதில்!

செல்லத்தம்பு:- இதுஇடைக்காலப் பதிலாக இருக்கலாம். ஆனல் இராணுவம் தேவையற்றது என்று நாங்கள் கருதுகிற பிரதேசங்களிலும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டிருக்கிருர்கள்:

### அவசரகாலச் சட்டம் தொடர்வது ஏன்?

பயங்கரவாதம் தொடங்கிய ஆரம்பக்கட்டத்தில் அவசரகாலச் சட்டத்துக்கு தேவையிருந்திருக்கலாம. நாடுமுழுவதும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட வேண்டிய தேவையும் இன்றியமையாததாக இருந்தது. ஆனல் இன்றுவரை நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டம் எதற்காகத் தொடர்ந்து அமுல் நடத்தப்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

1953-ம் ஆண்டு பிரசித்தமான ஹர்த்தாலையடுத்து மேற்கு, தெற்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டது. 1961-ம் ஆண்டு தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டபோது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. 1971-ம் ஆண்டு—வவுனியாவில் மட்டும் அனுபவமற்ற சில சிங்கள வாலிபர்களால் சில குழப்பம் மூண்டதைத் தவிர-வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் பரிபூரண அமைதி நிலவுகிறது!

### பொறுப்பாளிகள் யார்?

வவுனியாப் பட்டினத்துள் எவ்வித குழப்பமும் இல்லை. ஆனல் வவுனியாவைச் சுற்றியுள்ள சிங்களக் கிராமங்களிலிருந்து சிங்கள இளைஞர்கள் சிலர் வவுனியாப் பட்டினத்துக்குள் புகுந்து கொண்டார்கள். ஏப்ரல் ஐந்தாம் திகதி இரவு ஒரு தாக்குதல் நிகழ்ந்தது, அதன் பின் வவுனியா மாவட்டத்தின் எல்லைப்பகுதிகளில், வடமத்திய மாகாணத்தின் நடுப் பகுதியில் சில சம்பவங்கள் நடந்துள்ளன. இவை தவிர வவுனியா மாவட்டத்தில் நிகழ்ந்த ஏனைய சம்பவங்களை உருவாக்கியவர்கள் பாதுகாப்புப் படையினரே என்பதைவருத்தத்துடன் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1971 ஏப்ரல் 5-ம் நாள் இரவுக்குப் பின், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதுவித குழப்பமும் இடம்பெறவில்லை. எங்கள் பகுதிகளில் எதற்காக அவசரகாலச் சட்டத்தை வைத்திருக்க விரும்புகிறீர்கள்? அவசரகாலச் சட்டம்என்ற போர்வையின் கீழ் இராணுவம் தன் இஷ்டத்துக்கு இயங்க அனுமதிக்கப்பட்டிருககிறது.

### இராணுவம் ஏன்?

அரசாங்க அதிகாரிகள் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தி நடத்தக் கூடிய இடங்களில் மட்டும் இராணுவம் தான் நினைத்தபடி நடக்க முடியவில்லை. அதிர்ஷ்டவசமாக வவுனியா அரசாங்க அதிபர் நெவில் ஜெயவீராவின் நிர்வாகத்தில், முடிந்தவரை இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் இயங்கியது. ஏனைய இடங்களில் இராணுவத்தினர் மீது ஏராளமான புகார்கள் கூறப்படுகின்றன. மக்கள் தங்கள் அன்ருடக் கருமங்களைக் கவனிப்பதற்கு வெளியில் செல்ல அஞ்சுகின்றனர். எதற்காக இராணுவத்தை அங்கு வைத்திருக்க விரும்புகிறீர்கள்?

### சாதனை இதுதான்!

கடந்த மூன்று அல்லது நான்கு மாதங்களில் வவுனியாவில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் செய்த உருப்படியான காரியம், மக்களின் விருப்பத்துக்கு மாருக வவுனியா மாவட்டத்துக்கு விஜயம் செய்த தபால் தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியருக்கு பாதுகாப்பு அளித்ததுதான். இராணுவத்தினர் பாதுகாப்பு கொடுக்க அமைச்சர் அங்கு வந்தார்.

சனநாயகப் பண்பாடுடன் இயங்கத் தெரியாத அமைச்சர்களை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. குறிப்பாக மக்களின் வாக்கு மூலம் இச் சபைக்கு வராமல் புழக்கடைவழியால் அமைச்சராகி அதிகாரம் செலுத்துபவரை மக்கள்ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை!

வவுனியா மக்கள் அமைச்சர் குமாரசூரியரை விரும்ப



வில்லை. அவர் மக்களின் விருப்பத்துக்கு ஆளான ஒருவராக இருந்தால், அவரைச் சுற்றி 200 இராணுவ வீரர்கள் பாதுகாப்பு அளித்திருக்க தேவையில்லை—மக்கள் வெறுக்கும்அமைச்சர்களுக்கு பாதுகாப்புதருவதற்காக அரசாங்கம் இராணுவத்தை வைத்திருந்தால், நாங்கள் அதை எதிர்க்கவில்லை.

### மக்கள் எதிர்ப்பு

வவுனியா மாவட்ட மக்கள் குமாரசூரியரின் வரவை எதிர்த்தார்கள். தமிழரசுக் கட்சி மட்டுமல்ல; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளையின் தலைவர் கூட வவுனியா மண்ணில் காலடி வைக்க வேண்டாம் என்று தந்தியடித்திருந்தார்.

இத்தகைய அமைச்சர்களுக்கு பாதுகாப்பு தருவதற்காக இராணுவத்தை வைத்திருக்கிறேம் என்று நீங்கள் கூறினல் எமக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

ஆனல் ஏனைய நேரங்களில் இராணுவத்தினரை கட்டுக்குள் வைத்திருங்கள்: அவசரகால சட்டம் பிரகடனப் படுத்தப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட தென்பதை நாம்மறுத்திடவில்லை. ஆனல் ஏன் அதை வாபஸ் பெருமல் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் எமதுகேள்வி.

### தணிக்கை ஏன்?

அடுத்து, இந்நாட்டில் பத்திரிகைத் தணிக்கை அமுலில் இருக்கிறது. கடந்த மூன்று நான்கு மாதங்களாக பத்திரிகைத் தணிக்கைக்கு இந்நாட்டில் அவசியமிருக்கவில்லை யென்பதே எனது கருத்து: கிழக்கு பாகிஸ்தானில் ஓர் உள்நாட்டுப்போர் மூண்டது இன்றும் நடைபெறுகிறது. அந்நாட்டில் இலட்சக்கணக்கானேர் சுடுபட்டும் சுட்டெரிக்கப்பட்டும் இருக்கிருர்கள். பல இலட்சம்பேர் பட்டினியால் செத்திருக்கிருர்கள்: எழுபது இலட்சம்பேர் அகதிகளாக இந்தியாவுக்குள் அடைக்கலம் புகுந்திருக்கிருர்கள். கிழக்கு பாகிஸ்தானை ஆட்சி புரியும் மேற்கு பாகிஸ்தானே 1200 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தும் அங்கு பத்திரிகை தணிக்கை நீக்கப்பட்டுவிட்டது.

ஆனல் சனநாயகத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு நீங்கள் பத்திரிகைத் தணிக்கையைத் தொடருவது ஏன் என்று கேட்கிறேன்!

பிரதமர், அவராகவே 1200 பேர் இறந்து விட்டதாக அறிவித்திருக்கிருர்: இவர்களில் கடைசியாக இறந்தவர் பல மாதங்களுக்கு முன் இறந்திருக்க வேண்டும். எனவே எதற்காக நீங்கள் பத்திரிகைதணிக்கையை வைத்துக் கொள்ள விரும்புகிறீர்கள்?

நீங்கள் அவசரகால நிலையைத்தான் தொடர்ந்து வைத்திருந்தாலும் சில காரியங்களை நீக்கி விடலாம். பாதுகாப்புக்கு இராணுவத்தின் உதவி தேவையற்ற பகுதிகளிலிருந்து அவர்களை வாபஸ் பெறுங்கள்! அவசரகாலச் சட்டம் தேவையற்ற—அமைதி நிலவும் பகுதிகளில் அச்சட்டத்தை வபாஸ் பெறுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மூதவை ஒழிக்கப்படும் போது அரசியலுக்கு புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சிலரும் போய் விடுவார்கள் என்பதறியும் போது நமக்குமகிழ்ச்சிதான். மூதவையிலுள்ள ஒரு அமைச்சரின் நடவடிக்கை பற்றியே நாம் கவலையடைகிறேம்: கடந்த 15 மாதங்களாக சனநாயக விரோத நடவடிக்கையில் அவர் ஈடுபட்டுவருகிருர்,

இந்த அமைச்சர் (குமாரசூரியர்) வட மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அலட்சியப்படுத்திவருகிருர். வவுனியாத்தொகுதியின் அஞ்சல் தேவைகளைப் பற்றி, வவுனியாவில் கடந்த தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சி சார்பில் போட்டியிட்டு தோற்ற திரு. எ. எஸ். பத்மநாதனுடன் தொடர்பு கொண்டு தமக்கு அறிவிக்கும்படி வடமாகாண அஞ்சல் அத்தியட்சகருக்கு இந்த அமைச்சர் கடிதம் எழுதியதை என்னுல் நிருபிக்கமுடியும். அது ஒரு சம்பவம் மட்டுமல்ல. வவுனியா மக்களால் நிராகரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட வேட்பாளரின் முன் ஆலோசனையுடனேயே, அவரது அமைச்சின் கீழ் வரும் ஒவ்வொரு நியமனமும் நடைபெறுகிறது.

### பணிய மறுத்தனர்!

இப்படிப்பட்ட காரணங்களால்தான் வவுனியா மக்கள் அவரை விரும்பவில்லை. அவர் அங்கு வருவதை எதிர்த்தனர். இதனுல்தான் 200 ஆயுதம் தாங்கிய இராணுவ வீரர்கள் சகிதம் அமைச்சர் அங்கு வரநேர்ந்தது. ஆனல் அவரை வரவேற்க வவுனியா பொதுமக்கள் 200 பேர் கூடபோகவில்லை. அவர்தான் தான் தமிழர்களின் பிரதமர் என்று கூறிக்கொண்டு திரிகிருர். ‘நான் யாழ்ப்பாணத்தைப் பணிய வைத்துவிட்டேன்; மட்டக்களப்பைப் பணிய வைத்து விட்டேன்; வவுனியாவையும் பணியவைப்பேன்’ என்று அமைச்சர் குமாரசூரியர் கூறினுராம். ஆனல் வவுனியா மக்கள் அவருக்கு பணிய மறுத்துவிட்டனர். சில பகுதிகள் அவரை விரும்பவில்லையென்பதை வவுனியா எடுத்துக் காட்டிவிட்டது.

தோல்வியடைந்த வேட்பாளர்களை ஏனைய அமைச்சர்கள் பின்தொடர்ந்து திரியவில்லை. ஒரு குறிப்பிட்ட தொகுதியைப் பற்றிய விபரம்தேவைப்பட்டால், கௌரவ பொது நிர்வாக, உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர், அந்தத்தொகுதியின் தேர்ந்தெடுககப்பட்ட பிரதிநிதிக்கு எழுதிக்கேட்கிருர். போக்குவரத்து அமைச்சரும் அப்படியே செய்கிருர். ஏதாவது ஒரு விஷயத்துக்கு சிபார்சு தேவைப்பட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சிபாரிசினையே தான் ஏற்பேன் என்று நிதியமைச்சர் இச்சபையில் கூறியிருக்கிருர்.

### செயற்கை அமைச்சர்

ஆனல் அமைச்சர் குமாரசூரியரோ தேர்தலைச் சந்திக்க அஞ்சியவர். அவர் ஒரு செயற்கை அமைச்சர்; செயற்கை பா. உ. க்களை உருவாக்க முயற்சிக்கிருர்!

(10-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீக்குள் விரலை வைத்தால்...!

## அத்தியாயம் (16)

சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் மனிதனுடைய சுயரூபத்தைக் காட்டிக் கொடுத்து விடுகின்றன. கெட்டவன் நல்லவன் போல வேடம் போட்டு நடிக்கலாம் பலரை ஏமாற்றலாம். ஆனால் சில வேளைகளில் சந்தர்ப்பம் எப்படியோ. அவனைக் காட்டிக் கொடுத்து விடுகின்றது. அப்படித்தான் அப்துல்லாவின் முகத்தில் ஏற்பட்ட பீதியினால், அவர் எதற்காகவோ அச்சமடைந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டான் ரகு. அப்துல்லா சென்றுவிட்டார்.

'ஏன் ரோஸி? உதவி மனேஜர் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டாரா?' என்று கேட்டான் ரகு.

'ரகு! அவன் ஒரு கோழை. சில சமயங்களில் ஏதாவது பித்தலாட்டங்களில் கலந்து கொள்கின்றான். அதனால் கம்பனிக்கே கெட்ட பெயர் ஏற்பட்டு விடுகின்றது' என்று கூறிவிட்டு எழுந்து தன் அறைக்குச் சென்றாள். அவளைப் பின் தொடர்ந்தான் ரகுராமன்.

'ரோஸி! நான் மேற்கொள்ளும் வேலை சட்ட விரோதமானதாக இருக்கலாம் என யோசிக்கின்றேன். அப்படித்தானே?'

'சட்டம் என்ன சட்டம்? எமது கம்பனி விதிமுறைகளின் படி நடக்காதவர்களைக் கூட சட்ட விரோதமாக நடந்தார்கள் என நாம் குற்றம் சாட்டுவோம். அரசாங்கம் சட்டரீதியாக மறுக்கும் சில விடயங்களில், நாம் அதை மீறவேண்டியும் வரும் நீ பயப்படுகின்றாயா ரகு?'

'நோ, நோ எனக்கென்ன பயம்? ஆபத்து நிறைந்த காரியங்களில் இறங்குவது எனக்கு ஒரு 'இன்ரறஸ்ட் கேம்' என்றான்.

'ரகு! இரவு ஏழுமணிக்கு என்னை எதிர் பாருங்கள்.' என்று கூறி விடை கொடுத்தாள் ரோஸி.

'ரோஸி!'

'ஜேஸ்!'

'எட்லின் இப்போ எங்கே இருப்பாள்?'

'எட்லினா? 'அவள் உங்களைத் தேடிப் போனாலும் போயிருப்பாள்; நீ கூறியதைக் கேட்டு அவள் அசந்தே போய் விட்டாள்.'

'உண்மையாகவா?'

'உண்மையிலேயே அவள் ஆச்சரியப்பட்டுப் போனாள். அவளுக்கு ஒரு சந்தேகமிருக்கு!'

'சந்தேகமா? என்னிலா?'

'ஆமாம்.'

'என்ன சந்தேகம்?'

'நீ மிஸ் பானுமதியை அன்று காப்பாற்றினாயே அது பற்றி...'

'ஓ... அதுவா? அந்த விடயம் தெரியுமா? அவள் ஒரு கர்வி. அகம்பாவம்கொண்டவள். தன்னைவிட அழகி, பண்புள்ளவள் இல்லையாது என்ற தலைக்கனம் உடையவள். அன்று அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றியதனால் என்னையே பெரிய மனிதன் என்று எண்ணிக்கொண்டு சுற்றுகிறாள். அவளைக் காதலிப்பதுபோல் நான் நடிக்கின்றேன்' ரோஸி! என் குணம்தான் நீ அறிந்ததாயிற்றே. அப்புறம் சந்தேகம் ஏன்?' என்றான்.

'எட்லின் ஒரு சந்தேகப் பிராணி. அவள் எதையும் இலகுவில் நம்பமாட்டாள்.'

'சரி நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று கூறி விட்டு எழுந்து சென்றவன், திடீரெனத் திரும்பிவந்து, 'ரோஸி' என்றான்.

'என்ன ரகு! நீ என்னையும் 'லவ்' பண்ணுகின்றாயா? என்று கூறிச் சிரித்தாள்.

'உன்னையா? நோ, நோ. நிச்சயமாக நான் உன்னிடம் மோதிக் கொள்ளத் தயாராயில்லை. அந்த இரண்டு போட்டோக்களையும் இன்னொரு முறை பார்க்கலாமா?' என்றான்.

'ஓ... அந்த போட்டோக்களா?'

'ஆமாம்.'

'நீயே கொண்டு போகலாம். ஆனல்... எதற்கும் இரவு சந்திக்கும் பொழுது கூறுகின்றேன்.' என்றாள்.

ஃ

அன்று மாலை மூன்று மணியளவில் தன்னுடைய வீட்டில் ஓர் கதிரையில் அமர்ந்திருந்த பானுமதி மின் விசிறியின் சுவிட்சைத் தட்டிவிட்டாள் காற்றுக் குறைவாகவிருந்த தாலும், வெயில் - காரணமாக ஏற்பட்டிருந்த புழுக்க நிலையே மின்விசிறியின் உதவியை அவள் நாடக் காரணமாயிருந்தது. வெளிப் புழுக்கத்தை செயற்கைக் காற்றின் உதவியுடன் நிறுத்திக் கொண்டு விட்டாலும், அவள் மனப் புழுக்கத்துக்கு மருந்து தேடினாள். எதிலும் கிடைக்கவில்லை. முதல் நாளிரவு ரகுராமன் தொலைபேசியில் கூறிய செய்தியைக் கேட்ட நேரம் தொடக்கம், அவள் மனம் ஒரு நிலையில்லாமல் தத்தளித்துக் கொண்டிருந்தது. பாரதியும் முன்பு போல் அடிக்கடி வருவதில்லை. அவளுக்குத்தான் கணவன் ஒருவன் துணையாகி விட்டானே. அதனால் தனிமை அவளுக்கு மிகவும் கொடுமையானதாகவே இருந்தது. மனிதனுக்கு தனிமை மரணத்தை விடக் கொடுமையானது என்று ஒரு கவிஞன் கூறிய வாக்கியமும் அவளுக்கு நினைவுக்கு வந்தது பாவம் அவளால் என்னதான் செய்ய முடியும்?

வீட்டிற்கு வந்த ரகுராமன் பானுவைத்தேடினான். எங்குமே அவளைக் காணவில்லை. அவன் தன் தங்கை மாலதியை அழைத்து விசாரித்தான்; அதற்கு அவள், 'ரீச் சரா? அவங்கள் தலைவலி என்று சொல்லிக்கொண்டு படுத்திருக்கிறாங்கண்ணா' என்றாள்.

பானுவுக்குத் தலைவலி என்றதும் அவனுக்குத் தன் இதயமே வலிப்பது போன்றிருந்தது. உடனேயே அவள் இருக்குமிடம் நோக்கிப் பறந்தான் ரகுராமன்.

அங்கே மின் விசிறிக்கு அருகே ஒரு கதிரையில் கண்ணை மூடியபடி தலையைக் கதிரையின் மேல் சட்டத்தில் சாய்த்துக்கொண்டு இருந்தாள் பானுமதி; சப்தம் செய்யாமல் அவளுக்குப் பின் புறம் சென்று நெற்றியில் கையை வைத்துக் கொண்டே, 'பானு' என்றான்.

விழிகளைத் திறந்த பானு தனது முகத்துக்கு நேரே குனிந்து நோக்கும் அவன் அழகு முகத்தில் புன்முறுவல் பூத்து நிற்பதைப் பார்த்து ஒரு கணம் தன்னையே மறந்தாளாயினும், 'இப்பத்தான் என் நினைவு வந்ததாக்கும்' என்றாள்.

'பானு! உனக்குத் தலைவலி என்று மாலதி கூறினாள். நான் பதறிப்போனேன்' என்றான்.

'நான் தலைவலியால் அவதிப்படவில்லை; மனதில் தான் வலி.'

'ஏன் அப்படி? நான் ஏதும் தவறு செய்தேனா?

அவனுடைய கேள்வி அவளைப் பேசாமடந்தையாக்கி விட்டது. கூசாமல் பொய் கூறுகின்றானே என்று துடித்தது அவள் மனம். ஆனாலும் அவள் எதுவுமே பேசாமலிருந்தாள்.

'பானு! உன் வீடு தேடி வந்த என்னை இரு என்று கூடக் கூறாமல் நிற்க வைத்துக் குற்றம் சுமத்துகின்றாயே? என்றான்.

'நான் குற்றம் சுமத்தவில்லையே ரகு! எனக்குத் தெரியாமல் குற்றம் செய்து விட்டு அதன் காரணமாக நீங்கள் வருந்துகிறீர்களோ?'

'குற்றத்தைப் பற்றி மட்டுமே கூறுகின்றாயன்றி நான் கேட்டது...'

'ரகு! இது உங்கள் வீடு நான் உங்களுடையவள். அந்த நினைப்பிருந்தால்... நீங்கள் இப்படி உபகாரங்கள் நான் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கின்றீர்களா?'

'பானு! நீ கூறுவதும் உண்மை தான். இருப்பினும் கேட்டேன். அது சரிபானு' என்று கூறிக்கொண்டே திரும்பி யன்னல் வரை சென்றவன் சில நிமிடங்கள் மௌனமாக நின்றிருந்தான். அவளும் எழுந்து அவன் அருகே சென்று நின்றாள்.

'ரகு! என்னுடன் கோபமா?' என்றாள்.

'பானு உன்னுடன் எனக்கென்ன கோபம், ஆனால் உன்னிடம் அன்பு வைத்து விட்டதால் என்னை நானே கோபித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன் பானு. உனக்கு முன்னரே கூறியிருக்கிறேன் நான் செய்யும் சில செயல்கள், என் நடத்தை உனக்கு விருப்பமில்லாதவையாகவும், நீ வெறுத்து ஒதுக்கக் கூடியனவாகவும் இருக்கலாம் என்று. ஆனல்...' என்று கூறி விட்டு, அவன் சென்று ஒரு கதிரையில் அமர்ந்தான்.

அவளும் அவனருகே வேறோர் கதிரையில், அமர்ந்தவாறு அவனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவனுடைய முகத்தில் சிந்தனை உணர்வுகளால் ஏற்பட்ட குழப்ப நிலையையும் அவள் உணர்ந்து கொண்டாள். சிரித்துப் பழகிய அவனுடைய முகத்தில் அமைதியின்மை குடிகொண்டிருந்தது. அவன் மனதில் எதையோ வைத்துக் கொண்டு கூறமுடியாமல் தவிக்கின்றான் என்பதையும் பானு புரிந்து கொண்டாள்.

'பானு! நான் யாரிடமும் என் அன்பை இதுவரை பகிர்ந்துகொண்டது கிடையாது. நான் இவ்வளவு நாட்களும் கவலையில்லாத மனிதனாகத்தான் திரிந்தேன். ஆனல் உன்னிடம் அன்பு வைத்த நாள் முதலாக என்னை நீ துன்புறுத்தி வருகின்றாய் பானு.'

'இல்லை ரகு. நீங்கள் கூறுவது தவறு. நான் உங்களிடம் சந்தேகப் பட்டேன்; என்றால் அதற்குக் காரணம் நான் உங்களிடம் கொண்டுள்ள அளவிடற்கரிய அன்புதான்; 'அன்புடையவர்களையே அதிகமாகச் சந்தேகிக்கின்றோம்' என்று ஒரு அறிஞரே கூறியிருக்கின்றார்.'

'அவன் யாரோ எழுதி வைத்தான் என்பதற்காக நீ என் மேல் சந்தேகப்படலாமா?'

'ரகு! நீங்கள் எதைச்செய்தாலும் நான் துன்பப்படமாட்டேன். ஆனல் நீங்களே உங்கள் வாயால் இன்னொருத்தியை ஏற்கப்போவதாகக் கூறிய பின்பு என்னால் எப்படிச் சந்தோஷமாக இருக்க முடியும்?' என்று கேட்கும் பொழுதே அவளுடைய அழகு விழிகளில் நீர் முத்துக்கள் நிரம்பிச் சிதறி கன்னங்களின் வழியே மணிமணியாக உருண்டோடின. அவள் விழிகளில் நீர் வழிவதைப்பார்த்ததும் அவன் மனமும் தளர ஆரம்பித்து விட்டது.

**யாழ். ஜனார்த்தனன்**

'பானு! நீ அழக்கூடாது பானு. நீ சிரித்துக் கொண்டே எப்பொழுதும் இருக்க வேண்டுமென விரும்புவன் நான்.'

'உங்களையே நான் இழந்து விட்ட பின்பும் சிரித்துக் கொண்டே இருக்கணுமா?' குழந்தைபோல விம்மி விம்மி அழுதாள்.

'பானு! நான் நேற்றுப்பின்னேரம் ரோஸிக்குப் போன் செய்ததைக் கேட்டாயா?'

'ம், ம்' என்று மேலும் விம்மினாள்.

'பைத்தியம், பைத்தியம். அது ஒரு தந்திரம். அதை நீ நம்பிவிட்டாயா? பானு! உன்னை நான் என்றுமே இழந்து வாழ முடியாது பானு, நீ என்னை நம்பு! என் உள்ளத்திலும் சரி வாழ்விலும் சரி நீயே என்றும் இருப்பாய்.'

'இப்படி எத்தனை பேரிடம் சொல்லியிருப்பீர்களோ?'

'பானு! உன்னிடம் மட்டும் தான் கூறுகின்றேன். என் தொழில் விடயமாகத் தான் நான் அவளிடம் அப்படிக் கூற நேரிட்டது. உனக்குத்தெரியுமா பானு? உன்னை நான் காப்பாற்றியதற்காக, நீயே என்னை விரும்பி ஏற்றுக் கொண்டாய் என்பதற்காக நான் இப்படியெல்லாம் நடந்து கொள்ளவில்லை; நான் போகும் பாதை அப்படியானது. அதற்காகச் சில சமயம் அப்படியும் நடிக்க வேண்டியிருக்கின்றது.'

'என்ன இருந்தாலும் அவளை அப்படி ஏமாற்றலாமா ரகு?'

'ஏமாற்ற வேண்டிய இடத்தில் ஏமாற்றத் தான் வேண்டும்.'

'ஏன் ரகு?'

'ஏன்? எதற்கு? என்று என்னிடம் நீ கேட்டால் உன்னி

(10-ம் பக்கம் பார்க்க)

## சிலையைக் கண்டேன்

(அம்பல—நாகராசா)

நீண்டிருக்கும் கருவிழியி னொளிக் கதிர்கள்
நிலவினது ஒளியதனின் தண்மை ஒக்கும்
தாண்ட அவன் எடுத்து நிற்கும் தான்க ளென்றும்
தணியாத ஆசையதைத் தூண்டி நிற்கும்
சீண்டுதற்குச் சிறகாக விரிந்து நிற்கும்
சிறுகரமோ சிந்தையதைச் சிதைத்து நிற்கும்
வேண்டு மென்று இத்தனையும் காட்டி என்னை
வீழ்த்துவதின் மங்கையவள் நோக்க மென்னே!


முட்டி நிற்கும் இதழொழாவன்றும் விரிந்து நின்றால்
முகையவிழ்ந்த மலரினது இதழை ஒக்கும்
பட்டியலாய்க் கோத்திருக்கும் பற்க ளெல்லாம்
பவள மணி யொளியதனைப் பகர்ந்து நிற்கும்
கட்டவிழ்த்த கருங்குழலோ காற்றிலாடி
கருமுகில்களிடையினிலே ஒன்றாய் நின்று
விட்டுவிட்டு மின்னலாக என்னுட் பாய்ச்சி
வீழ்த்துவதின் மங்கையவள் நோக்க மென்னே?

காலிலே கட்டிவிட்ட சிலம்பிஞேசை
காரிகையின் கிரிப்பி லொன்றிக் கலீ ரென்னும்
வேலினை நிகர்த்த அந்த விழியிரண்டும்
வெருட்சியாயங்குமிங்கும் விழித்து நிற்கும்
பாலினை வடித்து நிற்கும் வதனம் நோக்கின்
பவுர்ணமி மதியொளியாய்ப் பகர்ந்து நிற்கும்
மேலிமையால் எனை நோக்கி மேனிகாட்டி
வீழ்த்துவதில் மங்கையவள் நோக்க மென்னே?

கடைக் கண்கள் வீச்சினிலே கரங்கள் கட்டி
காரிகையின் அருகினிலே காற்றாய்ச் சென்று
மடப் பெண்ணே இத்தனையும் மாய்த்தாய் என்னை
மங்காத பரி சொன்று தருவேன் என்று
தடை ஏதுமில்லாமல் அணைத்தேன் அந்தோ
தடக்கி அவள் தாள் வீழ்ந்து நிமிர்ந்து பார்த்தால்
விலை... விழித்து நன்கு
வீரியமாய் நிற்கின்ற சிலையைக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை



## 5. சிரிப்பும் கொதிப்பும்

கரிகாலன்

டொக்டர் போட்ட பீடிகைபற்றிக் கடந்த வாரம் எழுதியிருந்தேன். அப்பீடிகையின் பின்னே நடந்த நிகழ்ச்சி மிகவும் சுவையானது. அவைசரல் கிளவி பகரவேண்டுமென்ற ஆவலிலும் விரசமாகிவிடுமோ என்ற அச்சத்திலும் உரையாடலில் சில வார்த்தைகளை விழுங்கி விட நினைக்கிறேன்.

பலப் பரீட்சை:

1965-70ல் வடமாகாணத்தில் நல்லூர் அல்லாதவொரு தொகுதியின் நியமனம் தொடர்பாக தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் அத்தொகுதியின் தமிழ்காங்கிரஸ் கற்றுக்குட்டி ஒன்றுக்குமிடையில் போட்டி ஏற்பட்டது. வழக்கமாக அத்தகைய நியமனங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விதப்புரையின் பேரிலேயே நடைபெறுவனவாயிருந்தும், அப்போது த. கா. கட்சியும் அரசாங்கத்தில் பங்காளியாக இருந்தமையாலும் த. கா. தலைவர் திரு. பொன்னம்பலம் இந்நியமனத்தில் நேரடி அக்கறையெடுத்து வஞ்சினம் பூண்டிருந்ததாலும், சம்பந்தப்பட்ட அமைச்சர் மிகவும் சங்கடமான நிலையிலிருந்தார். இப்போட்டாபோட்டி வலுத்து, தொகுதி மட்டத்தில் இது கட்சியின் மானப் பிரச்சினையாகவும் பரிணமித்திருந்தது.

விஷயம் த. கா. கற்றுக்குட்டிக்குச் சாதகமாகத் தீர்ந்துவிடலாம் போலிருந்ததால், குறிப்பிட்ட தமிழரசு நா. உ. டொக்டரின் துணையை நாடினார். கட்சி மட்டத்தில் விஷயமெதுவும் கைக்குக்கனமாகி விட்டால், சிக்கலாகி விட்டால், அல்லது அமைச்சர், பிரதம அமைச்சர் என்போரின் மட்டத்திற்குப் போய்விட்டால், கட்சி உறுப்பினர்கள் டொக்டரிடம் ஓடுவதுதான் வழக்கம். சற்று நெஞ்சை நிமிர்த்திக் கூறுவேன்: 'பெரிய இடத்தோடு' பேசத்தெரிந்தவன், பேசியவன், அதற்கான பெருமையும் திறமையும் படைத்திருந்தவன் நாகநாதன்.

'வாயிலோயே! வாயிலோயே!' என்று வாயில்காப்போனிடம் வாலைக்குழைந்து கொண்டு நின்றறியாதவன்; நேரே மன்னனிடமே சென்று வழக்குரைத்தவன். பூக்கட்டுபவனுடனும் பூசாரியுடனும் பேசிக்கொண்டிருக்கமாட்டான், நேரே மூலஸ்தானம் சென்று ஆதிமூலத்திடமே அடித்துப் பேசியவன்.

பின்தொடர்ந்து...

அன்று நாடாளுமன்றச் சபையினில் டொக்டர் வீற்றிருந்தார். ஏற்கனவே அமைச்சருடன் இது குறித்துப்பேசியுமிருந்தார். அத்துடன் திரு. பொன்னம்பலம் இது குறித்துப் பல தடவை அமைச்சரைக் கண்டுள்ளாரென்றும் அன்றும், மீண்டும் காணவிருக்கிறார் என்றும் அறிந்திருந்தார். இவ்விடயம் தொடர்பான ஆவணங்களும் அமைச்சரின் ஒப்பம் பெறுதற்கான படிவமும் டொக்டரின் சட்டைப்பையில் இருந்தன. திரு. பொன்னம்பலம் அமைச்சரைக் காண்பதற்கு முன்னராகவே விஷயத்தை எப்படி முடிப்பது என்று டொக்டரின் மனம் துரிதகதியில் வேலைசெய்து கொண்டேயிருந்தது.

இந்நேரம் குறிப்பிட்ட அமைச்சர் எழுந்து திரு. பொன்னம்பலத்திற்குச் சைகைகாட்டிவிட்டு வெளியே செல்கிறார். திரு. பொ. சடாரென எழுந்து பின்செல்கிறார். டொக்டரின் கழுகுக்கண்கள் இவற்றைக் கணித்துக்கொள்கின்றன. திரு. பொ. அமைச்சருடன் முன்னேற்பாடு செய்திருந்தபடி அவ்விடயமாகப் பேசுவதற்கு அமைச்சரும் திரு. பொ. வும் நாடாளுமன்ற மண்டபத்திற்குச் செல்கின்றனர் என்பதைப் புரிந்துகொண்ட டொக்டர் இந்தச் சந்திப்பை நடக்கவொட்டாது தடுப்பது எங்ஙனம் என ஒரு கணம் யோசிக்கிறார். அது முடியாத காரியம் எனினும், குறிப்பிட்ட விடயம் தொடர்பாகப் பேசாமலாவது பார்த்துக்கொள்ளவேண்டும்; அமைச்சரும் திரு. பொ. வும் இத்தொடர்பில் பேச்சை முடிக்கு முன்னரே தமக்குச் சார்பாக அமைச்சரின் கட்டளையை எழுத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும். தம் சட்டைப்பையிலிருந்த படிவத்தைத் தட்டிப்பார்த்துக் கொண்டே டொக்டரும் எழுந்து பின்னே செல்கிறார்.

நகைப்பும் கொதிப்பும்:

ஆங்கு மண்டபத்துள் திரு. பொ. வும் அமைச்சரும் அருகருகேயமர்ந்துள்ளனர். தம் விடயத்தை முடித்துக்கொள்ளும் ஆவலில் பேச்சைத் தொடங்குமுன்னர் அமைச்சரைத் தாஜா பண்ணுவதில் ஈடுபட்டிருக்கிறார் திரு. பொ. இம்முயற்சியில் அன்னாரது கை அடிக்கடி அமைச்சரின் தொடையில் தட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அழையா விருந்தாளியாக அச்சந்திப்பில் குறுக்கிடுவதும் டொக்டருக்கு அழகாகப்படவில்லை. இந்நிலையிற்றான் திரு. பொ. வின் நகைச்சுவையுணர்வின்மையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறார். திரு. பொ. வை ஆத்திரமூட்டக் கூடியதாக ஏதாவது நகைச்சுவைக் குறிப்பை எழுந்தமானமாகக் (casual) கூறி திரு. பொ. வின் சமபலத்தைக் கெடுக்க முனைகிறார்; டொக்டரின் தூண்டிலிரையைக் கெட்டியாகக் கவ்விக்கொள்கிறார் திரு. பொ.

டொக்டர்: (அமைச்சரை நப்புப் பெயரால் அழைத்து) கவனம், பொன்னு பிழையான இடத்தில்......... (Be Careful, Ponna...... at the wrong place)

திரு. பொ: (ஆத்திரத்துடன்) நாகநாதன் வாயை மூடும் (you better shut up!)

டொக்டர்: (அமைச்சர் பெயரை அழைத்து) ஆளை (திரு. பொ. வை) அறிந்தவன் என்ற முறையில் உங்களை நான் எச்சரிக்க வேண்டியவனாகிறேன் (Knowing the man as I do, I must warn you)

திரு. பொ: (கொதிப்படைந்தவராக) நாகநாதன்! இதில் தலையிடவேண்டாம்; நீர் உம்முடைய வேலையைப் பாரும் (don't interfere; mind your own business)

டொக்டர்: (மிகவும் நிதானமாக) நிச்சயமாக; நாடாளுமன்ற உறுப்பினன் என்ற முறையில் பொது மக்களின் நல்லொழுக்கங்களைக் கண்காணிக்க வேண்டிய கடமை எனக்குண்டு. (Surely, as a M. P., I have a duty to look after public morals.)

வெற்றிச் செருக்கு:

இந்நிலையில் மிகவும் பொறுமையிழந்து கோபம் கொழுந்துவிட்டெரிய திரு. பொ. தமது நோக்கத்தை மறந்து விருட்டென்றெழுந்து 'புறுபுறுத்தவாறே' சென்று விடுகிறார். வெற்றிச் செருக்குடன் டொக்டர் சாவதானமாகச் சென்று அமைச்சரின் பக்கத்தில் அமர்ந்து கொள்கிறார். அமைச்சர் முன்பு இராணுவத்தொடர்புள்ளவர். டொக்டரின் நகைச்சுவைத் துணுக்கையும் அது திரு. பொ. வை ஆத்திரமூட்டியதையும் வெகுவாகச் சுவைத்துச் சிரிக்கிறார். அமைச்சரின் 'குஷி' அடங்குவதற்கிடையிலேயே டொக்டரும் தமது நோக்கத்தை மறக்காது நிறைவேற்றிக் கொள்கிறார். மிகவும் சில்லறை விடயங்களுக்கெல்லாம் திரு. பொ. ஆத்திரப்படுகிறார் என்பதையும் கூறி, சிலர் சில்லறை விடயங்களைப் பெரிது படுத்திப் பிரச்சினையாக்குவதையும் கூறி, குறிப்பிட்ட தொகுதியின் நியமன விடயம் எவ்வளவு சில்லறை விடயம் என்பதையும் கூறி, தாம் ஏற்கனவே தயாராக வைத்திருந்த அமைச்சரின் ஒப்புதலுக்கான படிவத்தையும் எடுத்து நீட்டுகிறார். அமைச்சரும் தாம் சில்லறைத்தனமாக நடக்கக்கூடாது என்ற 'பெருந்தன்மையான' உணர்வுடன் ஒப்புதல் அளித்து ஒப்பமிடுகிறார்.

குரோதங்கடந்து......

திரு. பொ. வுக்கு நகைச்சுவையுணர்வு இருந்திருக்குமானால், அவர் ஆத்திரப்படாமல் தாமும் ஏதாவது நகைச்சுவையாகப் பதிலடி கொடுத்திருப்பார்; அவர் நோக்கமும் அன்று சிலவேளை நிறைவேறியிருக்கலாம் என டொக்டர் கூறியது மிகவும் உண்மையானதாகவே தோன்றியது. டொக்டர் திரு. பொன்னம்பலத்திடம் காணப்பட்ட ஆணவ, அகம் பாவங்களை வெறுத்தார். இதனால் அரசியற் களத்திற்கும் கருத்துக்கும் புறம்பாக டொக்டர் திரு. பொ. வுடன் முரண்பட்டு முட்டுப்பட்டுக் கொண்ட சேதிகள் ஏராளம் அரசியற் குரோதங்களுக்கும் அப்பாற்பட்டவர் டொக்டர்

குரோத உணர்வுகளை உண்டியலிலே சேமித்து வைக்காத சிறப்பு இயல்பாகவே டொக்டரிடம் இருந்தது. தமிழரசுக் கட்சியுடன் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள்ள குரோதம் மிகவும் வைரம் பாய்ந்ததாயினும் உடுப்பிட்டி முன்னாள் நா. உ. திரு. சிவசிதம்பரம், வவுனியா முன்னாற் நா. உ. சிவசிதம்பரம் இவர்களுடன் டொக்டர் மிகவும் அன்பாகப் பழகியதை அறிவேன்.

வவுனியா முன்னாள் நா. உ. தமது ஆதரவாளர் சிலருக்கு வேலைபெறுதற்கு டொக்டரின் சேவையை ஈடுபடுத்தியதையும் அறிவேன். அரசியற் குரோதங்களையே புறக்கணிக்கத் தயாராயிருந்த டொக்டர், தனிப்பட்ட குரோதங்களை எண்ணிப் பார்த்ததில்லை என்பதில் புதுமை ஏது? இத்துணை பிடுங்குப்பாடுகளின் பின்னரும் திரு. பொன்னம்பலத்தின் வீட்டுக்குச் சாவகாசமாகச் செல்லக்கூடிய தமிழரசுக் கட்சிக்காரனாகவும் த. கா. தலைவருடன் சரளமாகப் பேசக்கூடிய ஒரே தமிழரசுத் தலைவராகவும் விளங்கியவர் டொக்டரே. டொக்டரின் பால் த. கா. தலைவரின் ஈடுபாடு என்ன? அதைப் பிறிதோர் சமயம் எழுதுவேன்.

மட்டந்தட்டி.......

டொக்டர் தனிப்பட்ட அல்லது அரசியற் குரோதம் பாராட்டாதவராயிருந்தும் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் திரு. பொன்னம்பலத்தின் அகங்காரத்தை வகையாக மட்டந்தட்டினார். இன்னொருவரை அவமானப்படுத்துவது இங்கிதமற்றது என்பதை டொக்டர் எவ்வளவுக் கெவ்வளவு நம்பினாரோ, அவ்வளவுக்கவ்வளவு அகம்பாவிகளையும் பிறரது அவமானத்தில் பேரின்பம் காணும் பெரிய மனிதர்களையும் தலைகுனிய வைப்பதையும் அவர் நம்பினார்.

ஒரு முறை, யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில், பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் துரைரத்தினத்தை 'தம்பி, இன்னொரு தடவை சொல்லடா' என அவர் பணித்ததும் அங்கிருந்த திரு. பொன்னம்பலத்தை மட்டந்தட்டவே. எத்தொடர்பில் எதைக் கூறுமாறு டொக்டர் சொன்னார் அடுத்தவாரம்பார்ப்போமே,

(வளரும்)

## தீக்குள்...

(9ம் பக்கத்தொடர்ச்சி)

டமே நான் பொய் சொல்ல நேரிடும்; பொய் கூறுவதினால் நன்மையுண்டாகலாம் என்றால் கூறுவதில் தப்பில்லை ஆனால்... நீ என்னைப் பொய் கூறத் தூண்டமாட்டாய் என நினைக்கின்றேன். சத்தியமாக என்மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன்; நீ என்னுடையவள்! நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை வெறுக்க மாட்டேன்.'

'ரகு!' என்று தன் மலர்க் கரத்தால் அவன் வாயைப் பொத்தித் தடுத்தாள். அப்பொழுது அவளுடைய விரல் அவன் இதழ்களிடையே அகப்பட்டுக் கொண்டு விட்டது.

'பானு! இந்த அழகிய விரலைக் கடித்திருப்பேன். ஆனால் நீ...' என்று அவள்கரத்தைத் தன் கரத்தில் பிடித்தவாறு கூறினான்.

அவன் வாயில் அவள்விரல்கள் பட்டதினால் ஏற்பட்ட ஸ்பரிசம் அவள் உடலெல்லாம் தீயாகப் பரவிக் கொண்டு விட்டது. அப்படி அவனிடம் என்ன மாய சக்திதான் இருக்கோ? அவனுடன் பேசும் ஒவ்வொரு நிமிடமும் அவள் தன்னையே இழந்து தோல்விக்குள்ளாகி விடுகின்றாள். அவனைத் தொட்டு ஏற்படும் இன்பத்தைக் காட்டிலும் அவளாக அவனைத் தீண்டும்பொழுது...!பேசாத பதுமை போலிருந்தாள் அந்தப் பேசும் பொற் சித்திரம்.

அடுத்து அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பானு 'ரகு' என்று எழுந்தவளாய் தன்கரங்களால் அவன் கழுத்தை வளைத்துக் கட்டிக் கொண்டாள்.

(வளரும்)

## சோசலிசமாம் சோசலிசம்..!

இலங்கை வங்கி பொது மக்களுடன் சிங்களத்தில் மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டுமென்று முன்னாள் சம அந்தஸ்து வீரரும், நிதியமைச்சருமான டாக்டர் என். எம். பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

## சனநாயகத்துக்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னுடன் அவர் ஆலோசனை கலக்க வேண்டும் என்று நான் கூறவில்லை; ஆனால் அவர் தோல்வி கலக்காமல் இருக்கட்டும்; மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் சிபார்சுகளினால் அவரது தீர்ப்பு இழுத்துச் செல்லப்படாமல் இருக்கட்டும்! (குறுக்கீடு) 1970 ம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து நான் அவரது அமைச்சில் காலடி எடுத்து வைத்தது கிடையாது!

மஜீத்:— ஏன் நீங்கள் போகக்கூடாது?

செல்லத்தம்பு:- எங்களுக்கு அவரைவேண்டாம்.

மஜீத்:— அது தவறானது; நீங்கள் அங்கு செல்லவேண்டும்.

செல்லத்தம்பு:— செப்டம்பர் மாதம் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் இந்த அமைச்சரிடம் சென்று அவரது தொகுதியிலுள்ள ஒரு பெரிய கிராமத்துக்கு உப அஞ்சல் நிலையம் ஒன்று தேவையென்று கேட்டிருக்கிறார்.

இதற்கு, உடுவில் பிரதிநிதிக்கு அமைச்சர் கூறிய பதில், விஜேதனின் சிபார்சு வரும் வரை அவர் காத்திருக்கவேண்டும் என்பது. இந்த விஜேதன் யார்? கடந்த தேர்தலில் உடுவில் தொகுதியில் போட்டியிட்டு கட்டுக் காசையும் இழந்தவர்தான் இந்த விஜேதன். இச்சபையிலேயே அமைச்சரின் அந்த அறிவிப்பை ஆட்சேபித்திருக்கிறார் திரு. தர்மலிங்கம்.

இந்த செயற்கை அமைச்சரிடமிருந்து எந்த விதமான அஞ்சல் தேவைகளையும் கேட்டுப்பெற நான் தயாராக இல்லை யென்று எனது தொகுதி மக்களுக்கு நான் பச்சையாக கூறிவிட்டேன். இவரிடம் உதவிகள் பெறுவதை விட, அஞ்சல் வசதிகள் இல்லாமலேயே வவுனியா இருப்பது நல்லது. வன்னியைச் சேர்ந்த நாங்கள் காடுகளில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். இத்தகைய அமைச்சரின் பின்னால் நாங்கள் ஒருபோதும் போகமாட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழித் தேர்ச்சியும் தமிழ் அரச ஊழியர் நிலையும்!

1956ம் ஆண்டுக்குப் பின் அரசாங்கத்தில் சேர்ந்த சகல தமிழ் ஊழியர்களும் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்பது நிபந்தனை. புதிய சுற்று நிருபம் 35ன் பிரகாரம் சிங்கள தேர்ச்சி சித்தியடையாதோரின் விளக்கங்கள் தனித்தனியாக ஒவ்வொரு ஊழியரிடமிருந்தும் கோரப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊழியரும் தத்தமது விளக்கங்களை ஒரு மாதத்திற்குள் கொடுக்க வேண்டும். இச் சுற்றுநிருபத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பின்வரும் வரிசையில் அடங்குவர்.

(1) சிங்கள சோதனை எதனையும் எடுக்காதோர்.

(2) சிங்கள சோதனைகளை எடுத்தும் எதிலும் சித்தியடையாதோர்.

(3) சிங்கள சோதனையில் 3ம் தரம் சித்தியடைந்தோர்.

(4) சிங்கள சோதனையில் 5ம் தரம் சித்தியடைந்தோர்.

(5) சிங்கள சோதனையில் 7ம் தரம் சித்தியடைந்தோர்.

(6) சிங்கள சோதனை 8ம் தரம் எடுத்தும் அதில் சித்தியடையாதோர்.

மேற்குறிப்பிட்டுள்ள தமிழ் ஊழியர்களின் எதிர்காலம். என்ன?

என்பதே இன்றைய கேள்வி. இவர்களில் (1)ம் (2)ம் பிரிவைச்சேர்ந்தோர் நிலை மிகவும் கவலைக்கு இடமானது. இவர்கள் அதிகமாக வேலை இழக்கநேரிடும் என்று சொல்லப்படுகின்றது. இவர்கள் கொடுக்கும் விளக்கத்தை பொறுத்தே அவர்களின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்றும் சொல்லப்படுகின்றது..

இந்நிலையில் தொழிற்சங்க அடிப்படையில், சகல மொழி வழித் தொழிற் சங்கங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசியல் ரீதியில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக விளங்கும் தமிழ் அரசுக்கட்சிக்கு தமிழ்பேசும்மக்களின் ஒரு அங்கமாக விளங்கும் புதிய தமிழ் அரசாங்க ஊழியர்களின் இப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய பொறுப்பு உள்ளது.

சம்பந்தப்பட்ட மந்திரி அல்லது மந்திரிகளை பேட்டி கண்டு, பின்வரும் விடயங்களை கோரலாம்:-

1. சுற்றறிக்கையை வாபஸ் பெறச்செய்ய கோருதல்.

2. சிங்கள சோதனையில் தேர்ச்சிபெறமேலும் காலம் கோருதல்.

3. ஆங்கிலம் மூலம் கல்வி கற்ற வயது முதிர்ந்த (35 வயதுக்குமேல்) ஊழியர்களுக்கு சிங்கள நிபந்தனையை அகற்றல்.

4. புதிய அரசியல் திட்டம் அமைய இருப்பதனால் சிங்கள சோதனையில் சித்தியடையாத ஊழியர்களின் நிலையை புதிய முறையில் அணுகுதல்.

5. புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட அரசாங்கத்தை கோருதல்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் பலன் அளிக்காவிடின்,

(1) குறிப்பிட்ட சுற்று நிருபத்தையும் புதிய ஊழியர்கள் பிரச்சினையையும் பாராளுமன்றத்தில் கிளப்ப வேண்டும்.

(2) மந்திரிசபைக்கு மகஜர் ஒன்றை சமர்பித்தல்.

(3) சட்ட நடவடிக்கைகளை ஆராய்தல்.

அரசாங்க ஊழியர்கள் இச்சுற்று நிருபத்தால் பாதிக்கப்பட்டு வேலைகளை இழக்குமுன் நடவடிக்கை எடுக்கவேண்டும். வேலைகளை இழந்த பின்னர் எவ்வித நடவடிக்கைகளினாலும் நன்மை ஏற்படமுடியாது. பத்து வருடங்களுக்குமேல் அரசாங்கத்தில் வேலை பார்த்துவிட்டு சும்மா வீடு போகும் நிலைமைக்கு இடம் கொடுக்கக்கூடாது.

## தமிழ் தினவிழாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திப்படி, திரு. தங்கத்துரை வற்புறுத்திய அம்சங்கள் வருமாறு:—

(1) "தமிழ் மொழியே தமிழ்ப்பிள்ளைகளின் கட்டாய போதனா மொழியென்பது புதிய அரசியலமைப்பில் தெளிவாக வரையறுத்துக் கூறப்படவேண்டும்."

(2) "ஆங்கிலம் ஒவ்வொரு தமிழ் பிள்ளைக்கும் இரண்டாவது கட்டாய மொழியாக பயிற்றுவிக்கப்படவேண்டும்."

(3) சிங்களவர்கள், தங்கள் பாடசாலைகளில் தங்கள் குழந்தைகளுக்கு தமிழை ஒரு கட்டாய பாடமாக பயிற்றுவிக்க ஒப்புக்கொண்டு அது சட்டத்தில் இடம்பெற்றால் மட்டுமே தமிழ்ப்பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகப் படிப்பிப்பது குறித்து தமிழர்கள் சிந்திக்க முடியும்"

இவையே தங்கத்துரை தெரிவித்த கருத்து. இதை வைத்துக் கொண்டு ஏதோ ஆகாயக்கோட்டை கட்டுகின்றன இந்நாட்டுத்தினசரிகள்!

## சுகாதார......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தெல்லிப்பளை ஆஸ்பத்திரி எனது தொகுதி மக்களின் ஒரு முக்கிய தேவை. இந்த ஆஸ்பத்திரி கட்டிமுடிக்கப்பட்டும் மக்களுக்கு பயன்படாமல் இருந்து வந்தது. எனவேதான் இதை திறந்து வைக்கும்படி சுகாதார அமைச்சருக்கு நானே அழைப்பு விடுத்திருந்தேன். எனது அழைப்பை ஏற்று வந்த அமைச்சரை, உத்தியோகரீதியாக கைகுலுக்கி வரவேற்றேன். மாலை சூட்டியோ மேளம் கொட்டியோ பூரண கும்பம் வைத்தோ நிலபாவாடை விரித்தோ நான் வரவேற்கவில்லை.

"ஆஸ்பத்திரி திறப்புவிழா எனது தலைமையில் நடைபெற்றது. உத்தியோகரீதியான இந்த வைபவத்தில் மட்டுமே நான் பிரசன்னமாக இருந்தேன். இதன்பின் அமைச்சருக்கு நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்திலோ விருந்து வைபவம் போன்ற கேளிக்கை கொண்டாட்டங்களிலோ நான் கலந்து கொள்ளவில்லை. கட்சிக் கொள்கைப்படி அவற்றைப் பகிஷ்கரித்தேன்."

—இவ்வாறு செல்வா மேலும் தெரிவித்தார்!

### பண்டிதர் மறுப்பு!

தாம் சுகாதார அமைச்சருக்கும், நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் உதவி அமைச்சருக்கும் மாலை சூடியதாகவும், அவர்களை மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச்சென்றதாகவும் விருந்துபசாரத்தில் பங்குபற்றியதாகவும் 6.10.71 தினபதியில் வெளிவந்த செய்திகளை பண்டிதர் இரத்தினம் மறுத்துள்ளார்.

இது தினபதியாரின் வழமையான சின்னத்தனம்; கயமைக்குணம்; பொறுக்கித்தனம்; என்ற திரு. இரத்தினம் மேலும் தெரிவித்ததாவது:—

"அமைச்சருக்கு ஊர்காவற்றுறையில்தான் பட்டின சபை உறுப்பினர்கள் என்ற போர்வையில் சுதந்திரக் கட்சி கையாட்களால் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. அந்த விருந்துபசாரத்தில் நான் கலந்துகொள்ளவில்லை; நயினாதீவு ஆஸ்பத்திரியை பார்வையிட வந்த சுகாதார அமைச்சருடன் சென்றிருந்தேன். அரசாங்க அதிகாரிகள் உத்தியோக பூர்வமான முறையில் அன்று நண்பகல் உணவு அளித்தார்கள். இதை 'விருந்து' என்று கூறி மக்களை ஏமாற்ற முயலுகிறார் டூப் மாஸ்டர் தினபதியார்."

## கல்வியமைச்ச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்திலும் அரசியல் நிர்ணய சபையிலும், ஒரு பிள்ளைக்கு அதன் தாய் மொழியே போதனாமொழியாக இருக்கவேண்டுமென்று தமிழரசார் நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்தபோதும், புதிய அரசியல் சட்டத்தில் அதையும் சேர்க்கும்படி கோரிக்கை விடுத்தபோதும் அதை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து வாக்களித்துதோற்கடித்ததேன்? பாராளுமன்றத்துக்குள் ஒரு கொள்கை; வெளியில் தமிழ் மக்கள் மத்தியில் செல்லும்போது இன்னோர் கொள்கையா? யாரை ஏமாற்றுகிறார் கல்வியமைச்சர்?

—இவ்வாறு கேட்கிறார்கள் திருமலை வாழ் தமிழ் மக்கள்.

## வங்கி பயிற்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி தேர்வு தமிழில் இப்போது நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

தமிழில் நடைபெறவுள்ள வங்கியாளர் பயிற்சி வகுப்புக்கு கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பணி புரியும் வங்கி ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம். வகுப்புக்கள் நவம்பர் முதல் வாரத்தில் ஆரம்பமாக இருக்கிறது. வகுப்புக்களில் சேர்வதற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் திகதி 29-10-71;

பலமான போராட்டத்தின் பின் பெற்ற இந்த தமிழுரிமையைப் பயன்படுத்தி, வாய்ப்பை நழுவவிடாது பயன்பெற வங்கி ஊழியர்கள் தாமதமின்றி முன் வருவார்களாக!

## ஈழ-தமிழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மெனவும், அரசுக்கு சிபார்சு செய்துள்ளது. இது சம்பந்தமாக அரசாங்க உத்தரவு எதுவும் இன்னும் இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்பப்படவில்லை.

1972 சனவரியிலிருந்து இத்திட்டம் நடைமுறைக்கு வருமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## கூட்டணியினரின் சூழ்ச்சிகளைத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சி ஒழுங்குகள் பற்றித் திரு. சிதம்பரநாதனுடன் தந்தை பேசினார். 'உத்தியோக வைபவமொன்றில், தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்' மருத்துவமனை சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர், அமைச்சர், சுகாதார மா அதிபர் பேசுவதுதான் முறை. நான் தலைமை வகிப்பதானால் நிகழ்ச்சி இப்படித்தானிருக்க வேண்டும். நான் போட்டியிட்டு வரவேற்கவில்லை; மருத்துவமனையைத் திறந்துவைக்கும்படிதான் அமைச்சரைக் கேட்டேன். அந்நிகழ்ச்சி உத்தியோகபூர்வமானதாக இருக்கட்டும். என்று தந்தை கூறினார்.

திரு. சிதம்பரநாதன், சுன்னாகம் பட்டின சபைத் தலைவர் நாகலிங்கம், வி. பொன்னம்பலம் ஆகியோரும் பேச ஒழுங்கு செய்துவிட்டேன் என்றார்.

அப்படியானால் மருத்துவமனை சம்பந்தப்பட்ட வலிவடக்குப் பகுதிக்குள் அடங்கிய காங்கேசன்துறைப் பட்டின சபை, மயிலிட்டிக் கிராம சபை, உடுவில் ஏழாலை ஆகிய சபைகளின் தலைவர்களையும் உடுவில் ஆட்சிமன்ற உறிப்பினரையும் அழைப்பதுதான் சரியென்றும் அரசியல் நிகழ்ச்சியாக இதை மாற்றக்கூடாதென்றும் தந்தையும் சிதம்பரநாதனும் உடன்பட்டு, அன்றுவரையிலும் அறிவிக்கப்படாமலிருந்த ஏனைய உள்ளூராட்சித் தலைவர்களையும்சிதம்பரநாதன் மூலம் அழைப்பதென்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

### மறுப்பு

30-9-71ல் விமான நிலையத்தில் தந்தை அமைச்சரை அழைத்துவிட்டு வீடு திரும்பிய பின் சிதம்பரநாதன் தந்தையிடம் வந்தார்; உடுவில் தருமரும் கூட இருந்தார்—அமைச்சரும் ஏனைய கூட்டணியினரும் கூட்டத்தில் பேசவேண்டுமென்று முடிவு செய்துள்ளதாக அறிவித்தார்.

அப்பொழுது தந்தை, 'அப்படியானால் நான் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க மாட்டேன். அமைச்சரை அழைத்துவிட்டேன் மருத்துவமனையைத் திறந்து வைக்கும்படி கேட்டுவிட்டு, மருத்துவமனை திறப்பு விழா முடிந்ததும் நான் வெளியேறி விடுவேன் என்று கூறினார். சிதம்பரநாதன் சென்றுவிட்டார்.

30-9-71 பி. ப. 6. மணி அமைச்சரின் ஊர்வலம் மருத்துவமனை வாயிலை அடைந்ததும் தந்தை செல்வா ஒலிபெருக்கியில் தமிழிலே பேசினார் மருத்துவமனையைத் திறந்துவைக்கும்படி அமைச்சரைக் கேட்டார்.

### பங்குகொள்ளாது வெளியேறினர்

அமைச்சர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மருத்துவமனையைச் சுற்றிப்பார்த்தார்கள்: கூட்ட மைதானத்திற்கு அமைச்சரும் தந்தையும் வந்தனர். ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பொன்னம்பலம், சிதம்பரநாதன், நாகலிங்கம், எம். வி. சுப்பிரமணியம், அல்பிரட்துரையப்பா மற்றும் காங்கிரசாரும் கூட்டத்தில் பேசப் போவதாயும், காங்கேசன்துறை, மயிலிட்டி, ஏழாலை, உடுவில் ஊராட்சிமன்றத் தலைவர்கள் அங்கு அழைக்கப்படவில்லையென்பதையும் தந்தை அறிந்தார். மேடைக்கே போகாமல் தந்தை நின்றார். அமைச்சர் வருமாறு வற்புறுத்தினார்: தந்தை மறுத்தார். உடுவில் தருமரையும் அழைத்துக்கொண்டு கூட்டத்திற் பங்கு கொள்ளாது அங்கிருந்து வெளியேறினர்; பெருந்திரளான மக்கள் கூட்டம் தந்தையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து வெளியேறிச் சென்றது.

## தமிழர் தனி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

In the event of the Government deciding to draw up the constitution on its own, the Federal Party and the Tamil Congress could have boycotted the Assembly, and perhaps might have tried to set up a state on their own in the North with American assistance?

It was mainly to prevent such a situation that proposals from all sections of the public were sought. In fact, the Federal Party had submitted a proposal for a federal state.

இதன் தமிழாக்கம் வருமாறு:—

"அரசியல் நிர்ணய சபையைக் கூட்டாமலேயே இரண்டு மாதங்களுள் அரசாங்கம் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றியிருக்கமுடியும். ஆனால் சிந்திக்க வேண்டிய வேறு விஷயங்கள் இருந்தன. குறிப்பாக வட பகுதித் தமிழர்களின் பிரச்சினையாகும்.

"வட இலங்கைத் தொகுதியிலிருந்து ஒரு பிரதிநிதி கூட அரசாங்க கட்சியில் இல்லாததால், புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதில் அவர்களது ஒத்துழைப்பும் பங்கும் முக்கியமானதெனக் கருதப்பட்டது.

"அரசாங்கம் ஏதேச்சாதிகாரமாக ஒரு அரசியலமைப்பை உருவாக்கியிருந்தால், தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரசும் அதை பகிஸ்கரித்து அமெரிக்க உதவியுடன் வட இலங்கையில் தங்கள் சொந்த அரசை நிறுவ முயற்சித்திருக்கக்கூடும்.

"அந்த நிலைமை ஏற்படாமல் தடுக்காவே மக்களின் எல்லாப் பகுதியினரிடமிருந்தும் கருத்துக்கள் பெறப்பட்டன. உண்மையில், தமிழரசுக் கட்சி சமஷ்டி அரசமைப்புக்கான திட்டத்தை சமர்ப்பித்திருந்தது."

"எந்த ஒரு நற்காரியத்தையும் பின் போடாதே, நாளைக்கு நீ இருப்பாய் என்பதற்கு உத்தரவாதமில்லை. செய்வதை இன்றே செய்."
—கீதோபதேசம்.

இன்றே மில்க்வைற் தயாரிப்புகளை வாங்கி பயன் அடையுங்கள். மேலுறைகளை சேகரித்து அனுப்பி மிக உயரிய பரிசுகளைப்பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வெற்றிகரமாக காட்சியளிக்கின்றது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) நெல்சன் (திருமலை) இம்பீரியல் (மட்டு நகர்)

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, அசோகன்,
சுந்தரராஜன், ஜோதிலட்சுமி, சோ, ராஜம்மா, விஜயஸ்ரீ, ராமராவ்,

- மற்றும் பலர் நடித்த -

# தேடிவந்த மாப்பிள்ளை

(ஈஸ்ட்மன் கலர்) தயாரிப்பு-டைரக்சன் பி. ஆர். பந்துலு இசை எம். எஸ். விஸ்வநாதன்

8வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெம்பிளி (கண்டி)

நடிகர்திலகம்
சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
நாகேஷ், சுந்தரராஜன்,
நம்பியார், பண்டரிபாய்
—நடித்த—



# தெய்வ மகன்

டைரக்ஷன் A. C. திருலோகசந்தர்

வெலிங்டன் (யாழ்நகர்) தேவரின் அக்கா தங்கை

4வது வாரம் அமோகமாக
வெற்றியுடன் காட்சியளிக்கின்றது

கிங்ஸ்லி (கொழும்பு) — விஜயா (மட்டுநகர்) — லிடோ (யாழ் நகர்)

ஜெமினிகணேசன்
வாணிஸ்ரீ நம்பியார்
முத்துராமன் நாகேஷ்
சுந்தரராஜன் சயிலஸ்ரீ
எம். ஆர். ஆர். வாசு
டி. கே. பகவதி
—நடித்த—




கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# தபால்காரன் தங்கை

2வது வாரம்-சிலோன் என்டர்டெயின்மன்ட் திரைகளில் காட்சியளிக்கிறது

ராணி (யாழ்நகர்) சென்ட்ரல் (மருதானை) ஜோதி (திருமலை)

ஜெமினிகணேசன்
ஜெய்சங்கர் லட்சுமி
நாகேஷ் விஜயலலிதா
ஸ்ரீகாந்த் மனோரமா
—நடித்த—



# நூற்றுக்கு நூறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1971-ம் வருடம் ஐப்பசி மாதம் 10-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்